24

*Regd. No. M. 2026.* குரோதனஹு சித்திரை *May 1925.*

OFFICE OF THE REGISTRAR OF INDIA
3 JUL 1925
MADRAS




VOL I.] SANMARGA BHANU [NO. 4.

பொருளடக்கம். பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... ... ... 97
2. கல்வி ... ... ... ... 98
3. தியானம் ... ... ... ... 101
4. நாகரீகம் ... ... ... ... 104
5. வேதாந்த சாஸ்திரார்த்த சங்கிரக வினாவிடை ... ... ... 109
6. வேமன யோகியின் ஜீவிய சரித்திரம் ... 112
7. புருஷார்த்தம் ... ... ... 116
8. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ... 118
9. ஜெ. வி. போஸின் ஆராய்ச்சி ... 120
10. பெட்டிமனிதன் ... ... ... 124
11. அங்கும் இங்கும் ... ... ... 128
12. பஞ்சாங்கம்.


**Editor: Pandit P. Srinivasalu Naidu.**

Printed by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor, and published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15-0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20-0—0 |

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூபா. | 10-0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத் தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மணே நம:

# சன்மார்க்க பானு

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—(குறள்)

*All Rights Reserved.*

கற்றை 1 } குரோதன ௵ சித்திரை ௴. { கதிர் 4

## கடவுள் வணக்கம்.

எத்தனை பிறப்போ எத்தனை யிறப்போ
எளியனேற்கிதுவரை யமைத்த
தத்தளையெல்லா மறிந்த நீயறிவை
அறிவிலி அறிகிலேனந்தோ
சித்தமும் வாக்குந் தேகமு நினவே
சென்மமு மினியெனு லாற்று
வைத்திடிங்கென்னை நின்னடிகுடியா
மறைமுடி யிருந்தவான்பொருளே (1)

என்னைத் தானின்ன வண்ணமென் றறிகிலாவேழை
தன்னைத்தானறிந்திடவருள் புரிதியேற்றக்கோய்
பின்னைத் தானின்ற னருள்பெற்ற மாதவப்பெரியோர்
நின்னைத்தானீசராரென வாழ்த்துவர் நெறியால் (2)

மெய்யான தன்மை விளங்கினால் யார்க்கேனும்
பொய்யான தன்மை பொருந்துமோ — ஐயாவே
மன்னு நிராசையின்னம் வந்ததல்ல வுன்னடிமை
என்னு நிலையெய்து மாறென் ? (3)

# சன்மார்க்கபானு.

குரோதன ஞூ சித்திரை மீ.

## கல்வி.

---

கல்வியே இம்மை மறுமைப்பயன்களை அடையச்சாதகமாயிருப்பது. அறியாமையாகிய அருந்பிணியையகற்றி அறிவை அதிகப்படுத்துவது. அது அளவிடவியலாத அருமணி. அழியாத அமுதம். மானிடராகப்பிறந்தோர் ஒவ்வொருவரும் எப்பாடுபட்டாயினும் இதையே முதன்முதலாக அடைய முயலல்வேண்டும்.

விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரோடேனையவர். என்றார் நாயனார்.

அதிலும், 'தேராமற்கற்றது கல்வியன்று; ஆகையால் எழுதப்படிக்க மாத்திரம் தெரிந்துகொள்வது கல்வியின்பாற்படாது. சிறந்த இலக்கிய இலக்கணங்களில் சிலவற்றையேனும் நற்கணக்காயரிடம் கற்றல்வேண்டும்.

சிலர் கல்விகற்பது வயிற்றுப்பிழைப்பின் பொருட்டெனக் கருதி அதற்காகவே கற்கின்றனர். அத்தகைய கல்வியால் விசேஷித்தபயனை எதிர்பார்க்க முடியாது.

கற்றதனாலாய பயனென்கொல் ? வாலறிவன்
நற்றாள் தொழா அ ரெனின்.

என்று தேவர் திருவாய் மலர்ந்தருளியபடி கல்வியின்பயனையறிந்து அதன்பொருட்டு கற்பதே சாலசிறந்ததாகும்.

கல்வியின் பெருமையையும் அதன் அவசியத்தையும் நம் நாட்டார் இன்னம் அறிந்துகொள்ளாமலிருப்பது அறிஞருள்ளத்தைப் பெரிதும் வருத்தாமலிராது. மூலை முடுக்குகளிலெல்லாம் பாடசாலைகள் நிறைந்துகிடந்தும், அவறறுள் சில இலவசமாகக் கற்பிக்க முன்வந்திருந்தும், கல்விகற்றவர்களின்தொகை அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை.

இருபத்துமூன்று ஜில்லாக்களடங்கிய இச்சென்னை இராஜதானியில் கற்றவர்களின் தொகை எவ்வளவிருக்கின்றதென்பதையாராயுமிடத்து இதன் உண்மை இனிதுவிளங்கும். இவ்விராஜதானியின் ஜனத்தொகைமொத்தம் 4,27,94,155. இவற்றுள் ஆண்களின்தொகை 2,11,00,158. பெண்கள் 2,16,93,997.

ஆண்பாலரில் தாய்ப்பாஷைமட்டும் கற்றவர்கள் 32,10,842 பெயர். அதாவது 100 க்கு 15 பேராவர். தாய்ப்பாஷையோடு ஆங்கில மொழியுமறிந்தோர் 3,57,928 பேர். அதாவது 1000க்கு 17 பேராவர். எனவே புருஷர்களில் படித்தவர்கள் 100 க்கு 11 பேராவர்.

பெண்பாலரில் தாய்ப்பாஷைமட்டு மறிந்தவர்கள் 4,56,895 பேர் அதாவது 100 க்கு 2 பேர். ஆங்கிலமொழியும் தெரிந்தவர்கள் 44,405 பேர், அதாவது 1000 க்கு 2 நபர்கள். எனவே ஸ்திரீகளில் கல்விகற்றோர் சராசரி 100 க்கு 10 பேராவர்.

ஆண்களும் பெண்களும் சேர்ந்த மொத்ததொகையில் தாய்ப்பாஷையில் கல்விகற்றோர் 36,67,737. அதாவது மொத்தத்தில் 1000 க்கு 86 பேர். இவர்களில் ஆங்கிலமுமறிந்தோர் 4,02,333 பேர். அதாவது 1000 க்கு 9 பேராவர். எனவே மொத்தத்தில் படித்தவர்கள் 1000 க்கு 10 பேராவார்.

கல்வியிலும், அறிவிலும், நாகரீகத்திலும் நம் நாடு எத்தனையோ முன்னேற்ற மடைந்திருக்கின்றதென்று பெருமை பாராட்டிக் கொள்ளும் இக்காலத்திலும் நூற்றுக்குப் பத்துப்பேர்களே கல்வி

கற்றிருக்கின்றன ரென்பது எவ்வளவு விசனகரமானவிஷயம். அதி லும் இக்கணக்கு 'எல்லப்பசெட்டிலக்க ஏகலக்க' என்பதுபோல, கால்படிப்பு அரைக்கால்படிப்பு வீசம்படிப்புக்காரர்களையும் சேர்த் துப் போடப்பட்டிருக்கின்றது. 'இராமசாமி' என்பதை 'ரமசாமி' என்றும் 'கோவிந்தசாமி' ஏன்பதை 'கொந்தசமி' என்றும் 'பொடி' என்பதைப் 'போடி' என்றும் வெறுங் கையெழுத்தையும் சரியாகப் போடத் தெரியாதவர்களையும் சேர்த்தே நூற்றுக்குப் பத்துப்பேர் கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, பிழையில்லாமல் பேசவும் எழுதவும் தெரிந்தவர்களைமட்டும் எண்ணுவோமானல் நூற்றுக்கு ஒருவர் இருவரே தேருவர்.

கோடைகால விடுமுறையின்போது ஆசிரியர்களைத் தேர்ந் தெடுத்து கிராமங்களுக்கனுப்பி பகற்காலங்களில் கல்விகற்க வீய லாத வியவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் அவர்களுக்கு வசதியான காலங்களில் வகுப்புக்களமைத்து யாவருக்கும் இலவச மாகக் கற்பித்தல், கட்டாயக் கல்விமுறையை ஏற்படுத்தல் என்னு மிவற்றைச்செய்ய துரைத்தனத்தார் கருணை செய்வாராயின் இக் குறை ஒருவாறு நீங்கும்.

தன்னயங்கருதாத் தேசபக்தர்களும் செல்வர்களும் ஆங் காங்கு இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துதல் மிகுந்த அவசிய மும் உபகாரமுமாகும்.

எல்லாம்வல்ல இறைவர் இன்னருள் புரிவாராக.

ஓம் தத் ஸத்.

---

ஸ்ரீ

# தியானம்.

(72-ம் பக்கத் தொடர்ச்சி).

சகலப் பிராணிகளுக்குள்ளே யிருந்தும் அப் பிராணிகள் அறியாத வாறு புண்ணிய பாவங்களைச் செய்வித்து அவைகளுக்கு ஈடான பலன் களைக் கொடுத்துச் சூர்யனைப்போல் பற்றற்றிருப்பவர். ஆங்குளது ஈங் கில்லை ஈங்குளது ஆங்கில்லை என்னுதபடி எங்கும் பரவி விளங்கும் பேரொளியானவர். இத்தன்மையரெனமனத்தால் நினைத்தற்கும் இன் னவரென வாக்கால் உரைத்தற்கும் எட்டாதவர். சங்கற்பமாத்திரத்தால் சர்வஜகத்தையும் சிருட்டிக்கும் சொலற்கரிய சக்தி யுள்ளவர். சிருஷ் டித்த அனைத்தினுள்ளும் தான் அநுப்பிரவேசஞ் செய்வார். சர்வ பூதங் கள் உண்டாதற்கும் நிற்பதற்கும் அடங்குதற்கும் காரணமாயிருந்தும் தனக்குத்தோற்றம் நிலை இறுதிகளில்லாத மூதற்பொருளா யிருப்பவர். எல்லா எழுத்துக்களுந் தானேயாய் அவ்வெழுத்துக்களுக்கு வேருய் அமரும் அகரவுயிர்போல், எல்லாப் பொருள்களும் தானேயாயும் அப் பொருள்களுக்கு வேருய்த் தனித்து நிற்பவர்.

இராப் பகல்கள் கோடா விதமாகச் சந்திர சூரியர்களை நிலையாக வைத்தவர். பூமியைத் தன் சாமர்த்தியத்தால் தாங்குகின்றவர். காற்றை இடைவிடாமல் இயங்கச் செய்பவர். அக்கினியை எரியச்செய்பவர். மேகங்களைக் கூட்டி மழையைப் பொழிவிக்கின்றவர். அம்மழையால் அபரிமித அன்னுதிகளை உண்டாக்குபவர். இரசான்மனுன சோமனுக இருந்து அவ்வன்னம் முதலிய ஒஷதிகளுக்குச் சுவைவ்யைத் தந்து போஷிப்பவர். அச்சுவை யன்ன முண்டபின் வயிற்றுள்ளே வைஸ்வானர வடிவராக இருந்து அவ்வன்னத்தைச் செரிப்பிக்கச் செய்பவர். செரித்த சுவை யன்னத்தின் சாரமாகிய சுக்ல சோணிதக் கலப்பால் தாய் வயிற் றிற் கருவ்டைந்திருக்குங் காலத்தில் குழவியைக்காத்து வளர்த்து வெளிக் கொண்டுவரும் வல்லப முடையவர். வெளிக்கொணர்ந்த அப்போது அத் தாயினிடமே பாலைக்கொடுத்துப் போஷிக்கின்ற பெருங் கருணையாளர்.

அலைகளாகிய கைகளை நீட்டி ஒலிக்கின்ற கடலை உலகஞ்சூழ இருக்கும்படி கரையு மில்லாமல் முத்திரித்து வைத்தவர். மறைகளை மூச்சுக் காற்றுப்போல் இலேசாக மொழிந்து அம்மறைகளுக்கு முடி

வரையா யிருப்பவர். உலகத்திற்குக் காரண பூதராய் அதனிடத்து உள்ளும் புறம்பும் வியாபித்துள்ளவர். சர்வான்மகரான அவரிடத்தே சகல லோகங்களும் வஸ்திரத்திலே நூல்போல் கலந்து கோப்புண் டிருக்கின்றன. காணப்படும் ஒவ்வொன்றும் அவருடைய மகிமையை விளக்குகின்றன வல்லவா? ஜலங்களிலுள்ள சுவையும், சசி சூரியர்களிடத்துள்ள பிரகாசமும் சர்வ வேதங்களிலுள்ள பிரணவமும் அவரே. ஆகாயத்திலுள்ள சத்தமும், சர்வ புருஷர்களிலுள்ள ஆண்மையும், மண்ணிலுள்ள புண்ய கந்தமும், தீயிலுள்ள தேஜசும் அவரே. எல்லாப் பிராணிகளிலுள்ள ஜீவனமும் அவரே. தவசிகளிடத்துள்ள தவமும் அவரே. சர்வ பூதங்களுக்கும் சநாதனமான பீஜமும் அவரே, புத்திமான்களிடத்துள்ள புத்தியும், தேஜஸ்விக ளிடத்துள்ள தேஜசும் அவரே, பலவான்களிடத்துள்ள காமராக மின்றிய பெலமும் அவரே யாவர். சர்வப்பிராணிகளிடத்துள்ள தர்மத்தோடு விரோத மாகாத காமமும் அவரே. சாத்விக ராஜசதாமஸ பதார்த்தங்கள் யாவும் அவரிடத்தினின்றே யுண்டாகின்றன. இதன் அபிப்பிராயம் என்னவென்றால்:—இரசத்தைவிட்டு நீரில்லை; மணத்தைவிட்டு மண்ணில்லை; அதுபோல் அவரை விட்டு எதுமில்லை; அனைத்துருவும் அவரே யாவர். சொல்லும் பொருளும் ஒன்றேயாகும்; ஆனால் பொருளைக் குறிக்கின்ற சொல்வேறு பொருள்வேறு என இரண்டாய்க் கருதுதல்போல் உலகு வேறாயும் அவர் வேறாயும் எண்ணப்படுகின்றது. உற்றுணரும்போது சொல்லும் அதின் பொருளைக் குறிக்கும் சக்தியும் ஒன்றேபோல் ஒன்றாயே இருப்பவர்.

ஆகவே, ஈசுவரர் சர்வ ஞானப் பிரகாசகரும், சுவதந்திரரும், சத்ய காமரும், சத்ய சங்கல்பரும், சர்வ சக்தி சம்பன்னரும், சர்வானந்த மயரு மவரே யாவர். "எஷ சர்வேசுவர:, எஷ சர்வஞ்ஞ, எஷ அந்தர்யாம், எஷ யோகிஸர்வஸ்ய பிரபவாப்ய யௌஹி பூதானும்.' இவர் எல்லாவற்றையும் ஆளுபவர்; இவர் முற்றறிவர்; இவர் எல்லாவற்றிலும் உள்ளீடாயிருப்பவர்; இவர் எல்லாப்பூதங்களினுடைய தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணர்; என்ற மறையே பிரமாணமாம். இந்த ஈசுவரர் இருதயத்தே இருப்பர். 'ஈஸ்வர: ஸர்வ பூதானும் ஹிருத்தேசே அர்ஜுன திஷ்டதி' சகல பூதங்களுக்கும் நியாமகரான ஈசுவரர் ஹிருதயத்தே எழுந்தருளி யிருக்கின்றார் என்று பகவத்கீதை கூறும். அவர் எங்கும் பரவி யிருந்தாலும் குறிப்பாகத் தெரிவதற்கு ஓரிடம்குறிக்கப்பட்டதாம்.

இவ்வாறு சர்வஞ்ஞத்வாதி குணங்களுடன் பாவமொழிந்து மிகப் பரிசுத்தர்களாய்ச் சுத்த சத்வ மயரான யோகிகள் தங்கள் இருதயத்தில் தியானத்தழுந்திய மனத்தாற் காண்பர். அது எல்லோருக்கும் எளிதல்ல.

ஆதலால் சர்வஞ்ஞத்வாதி விசிஷ்ட சிவ விஷ்ணு வாதிய ஆகாரங்களை இருதய கமலத்தே தியானித்தல் கூடும். குணங்களைக் கடந்தோனெனினும் மாயையின் சபனத்தால் குணமுடையவன்போல் விளங்கும் பிறை மதி நதி யணிந்த செஞ்சடிலமும், கண்ணொரு மூன்றும், நஞ்சு பொதி காளகண்டமும், மூவிலைச் சூலத்தையும் மானையும் மழுவையும் டமருகப் பறையையும் ஏந்திய கைகளும், பங்கில் மங்கையும் கொண்டு நீலப் புள்ளிவாளுகிர் வேங்கைத் தோலை அரையிலுடுத்தும், கரியுரி போர்த்தும், உரக ஆரம் பூண்டும், தவள நீறணிந்த பவளநிறம் வாய்ந்து விடையுகந்தேறும் விமலனாய் அளப்பருஞ் சீர்த்திகளை அளவிலாதுரைக்கும் செய்ய சீர்ப் பாதங்களை யுடைய சிவ சொரூபத்தை மனக் கமலத்தே தூய்மையுடன் தியானித்தல் கூடும். 'உமாசகாயம் பிரபும் திரிலோசனம் நீல கண்டம் தியாத்வா முனிர்கச்சதி பூத யோநிம் தமஸ: பராத்' 'உமையொரு பக்கத்தும் நீலகண்டமும் மூன்று கண்களு முடைய பிரபுவான பரமேசுரரைத் தியானித்து முனியானவன் பூதங்களுக்குக் காரணமும் தமசுக்கு அப்பாற்பட்டது மான பொருளை அடைகின்றான்' என்னும் கைவல்ய உபநிஷதம் சகுணத் தியானத்திற்குப் பிரமாணமாம்.

அல்லது, சோதிமயமான கிரீடமும், மந்தஹாஸ முடைய முக மண்டலமும், ஒளிவிடும் மணிகளிழைத்த மகரக் குழைகளும், கமலதளம் போன்ற கண்களும், மிருதுவாய் கறுத்துச் சுருண்ட முன்னெற்றி மயிரும், கௌஸ்துப மணிந்த கந்தரமும், சங்குசக்ரம் கதை பத்மம் என்னும் நான்கையுமேந்திய நாற் கரங்களும், வாடாதிருக்கும் வனமாலையும், திருமங்கையைக் குறிக்கும் மச்ச மார்பும் ஆகிய இவைகளைக் கொண்டு விளங்கிப், பீதாம்பர தாரியாய் சியாமமேக சுந்தரராய்த் தாமரை போன்ற திருவடிகளை யுடையவரும், தாமோதரன் முகுந்தன் கோவிந்தன் கேசவன் அச்சுதன் நாராயணனாதிய திவ்ய நாமங்களை யுடையவருமான விஷ்ணு பகவானது மங்கள வடிவத்தை மனக் கமலத்தே தியானித்தல் கூடும். அல்லது தங்களுக் கிஷ்டமான பிற மூர்த்திகளின் சொரூபத்தையும் தியானித்தல் கூடும். சாஸ்திரம் போதித்தவாறு தைலதாரை (எண்ணெயின் ஒழுக்கு) போல், அத் தியேயத்திற் சமானாகாரப் பிரவாகத்தோடு தீர்க்க காலம் இருத்தல் தியானமாம். தியானத்திற்குப் பகத்தையும் (பகம்=கொக்கு), பர்வதத்தையும் பூமியையும் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இம் மட்டன்றி, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபால னார்த்தமாக அவதாரங் கொண்டருளிய கிருஷ்ணாதியர்களையும் தியானித்தலாகும். அத்வைத சித்தி என்னும் அரிய நூலை இயற்றியவராகிய மது சூதன

சரஸ்வதி என்பவர் 'தியானப்யாசத்தால் வசீகரிக்கப்பெற்ற மனத்தால் சிவ யோகியர் நிஷ்களமாயும் நிஷ்கிரியமாயு முள்ள பரவஸ்துவைப் பார்த்தால் பார்க்கட்டும்; ஆனல் காளிந்தி மடுவின் மணல்மத்தியில் ஓடுகின்ற நீலமணிவண்ண முள்ளது என் கண்களையும் கருத்தையும் பறிக்கின்றது' என்று அருளி யிருக்கின்றார். (தொடரும்.)

க. அரங்கநாதப் பிள்ளை,
வேதாந்த தர்க்க போதகாசிரியர், சென்னை.

---

## "நாகரிகம்."

தற்காலத்தில் துர்விநியோகப் படுத்தப்படும் அநேக பதங்களுள் 'நாகரீகம்' என்னும் பதத்தைப்போல் வேறொரு பதமும் இல்லை. படித்தவர்-படியாதவர், தெரிந்தவர்-தெரியாதவர், சிறுவர்-பெரியோர், ஸ்திரீகள்-புருஷர்கள் ஆகிய எல்லோரும் 'நாகரீகம்' 'நாகரீகம்' எனச் சொல்லிக்கொண்டு அதன் பெயரால் செய்யும் அநாகரீகமான செய்கைகள் எண்ணிறந்தன. ஒருவன் அநேகர்களுடன் கை குலுக்கிக்கொண்டு, ரொட்டியை ஒருகையினல் கடித்துக்கொண்டு, மற்றொரு கையினல் தேயிலைப் பானம் செய்கிறான். ஏனடா அப்படிச் செய்கிறாய்? தேயிலை கெடுதலல்லவா? என்று கேட்டால், "இதுதான் தற்கால நாகரீகம், உனக்கென்னதெரியும். நீ சுத்தப் பட்டிக்காடு" என எளனம் செய்கிறான். மற்றொருவன் தலைமயிரை வெட்டிக் கிராப் வைத்துக்கொண்டும் கால் சட்டை கைச்சட்டை தொப்பி முதலியவை தரித்துக்கொண்டும் நிமிஷத்திற்கொருதரம் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டும் 'டாக்' 'டாக்' என்று பூட்ஸ் காலுடன் வெகு ஆடம்பரமாக நடந்துபோகிறான். 'இது உனக்குக் கஷ்டமாக இல்லையா? 'என்று கேட்டால் 'இதுதான் நாகரீகமான உடை' என்கிறான். வயது வந்த மங்கையர்கள் மாலைப்பொழுதில் அலங்கரித்துக் கொண்டு துணையின்றி கடற்கரையிலோ அல்லது மைதானங்களிலோ உலாவச்சென்று அன்னிய புருஷர்களுடன் குலாவி விளையாடுகிறார்கள். "அப்படிச் செய்யலாமா?" என்று அவர்களைக் கேட்டால் "இதுதான் தற்கால நாகரீகம். பெண்களுக்கு சுதந்திரம் வேண்டாமா?" என்கிறார்கள். இவைகளைப்போல் இன்னும் அநேகம் கூறலாம். மேலே சொன்னவைகளுக்கும் நாகரீகத்துக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். இச்செய்கைகள்

நாகரீக முள்ளவைகளா அல்லது அநாகரீக மானவைகளா என்பது செய்கிறவர்களைக் கேட்டாலே தெளிவாகும். ஆயினும் இப்போது நம் தேசத்தில் இவ்விஷயத்தில் குற்றவாளிகள் எவ்வளவு பேர் என்று ஆராய்வோமானால் நூற்றுக்கு எண்பது பேரைக் காணலாம்.

ஆகையால் நாகரீகம் என்னும் பதத்திற்கு உண்மையான பொருள் யாது? அந்நாகரீகத்தின் அடையாளங்கள் எவை? இந்தியா எப்பொழுதாவது உண்மையான நாகரீகத்தைப் பெற்றிருந்ததா? அயல் நாட்டு நாகரீகங்களி லிருந்து நம் தேசமானது கற்றுக்கொள்ள வேண்டியவை எவையேனும் உண்டா? நாம் கைக்கொண்டிருக்கும் தற்கால நாகரீகம் உண்மையான நாகரீகமா? இல்லையாயின் இதைச் சீர்திருத்துவதெப்படி? அச்சீர்திருத்தத்தில் நம் கடமையாது? என்னும் இக்கேள்விகளை ஒவ்வொரு இந்தியனும் ஆராயக்கடமைப் பட்டிருக்கின்றான்.

அது உண்மை நாகரீகமென்று சொல்வதற்குமுன் எது நாகரீக மல்ல என்று சொல்வது மிகவும் இலகுவானபடியால் மேலேசொல்லிய கேள்விகளில் மத்தியிலுள்ள இரண்டொன்றுக்கு முதலில் விடையளித்துப் பிறகு மற்றவைகளைப்பற்றி முறையே ஆராய்வோம். எது உண்மையான நாகரீகமா யிருந்தபோதிலும் நாம் தற்காலம் கைக்கொண்டிருக்கும் மேல்நாட்டு நாகரீகமானது உண்மையான நாகரீகமல்ல என்பது புத்தியுள்ள ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். இந்நாகரீகத்திலேயே பிறந்து வளர்ந்த மேல் நாட்டாரே இதை ஒப்புக் கொள்ளுகிறார்களென்றால் நாம் ஒப்புக்கொள்வது ஒருபெரிதல்ல. பெயர்பெற்ற ஆங்கிலேய மகானொருவர் "நாகரீகநோய் — அதன் காரணங்களும் சிகிச்சையும்" என்னும் ஓர் புத்தகம் எழுதி யிருக்கின்றார். இவரைப்போலவே இன்னும் மேல் நாட்டிலுள்ள அநேக பெரியவர்களும் தற்கால நாகரீகத்தை ஓர் நோயென்றும் பேயென்றும் கூறியுள்ளார்கள்.

இதற்குக் காரணம் என்னவெனில் இந்நாகரீகத்தில் அவச்யமானது அநாவச்யமானதாகவும் அநாவச்யமானது அவச்யமானதாகவும் கருதப்படுவதே. "பூசணிக்காய் போவதைவிட்டு கடுகுபோகிற இடத்தை ஆராய்வது" என்றார் பழமொழியுண்டு. அதுபோல எது முக்கியமானதோ அதைமுற்றிலும் மறக்கச்செய்து பன்னாடைபோல எது சத்தில்லாததோ அதை வற்புறுத்துவதே மேல்நாட்டு நாகரீகத்திலுள்ள முதன்மையான தீங்கு. மனித சரீரத்தைப்பெற்ற ஒவ்வொருவரும் சரீரப்பிரயாசைப் பட்டாயினும் ஆத்ம சுகத்தையும் பரமானந்தப் பிராப்தியையும் அடைய முயல்வதே முக்கிய கடமை. அப்படியில்லாது "எப்

பாடு பட்டாலும் சரீரசுகத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்; சரீர சுகமே மேலானது; இன்றைக் கிறந்தால் நாளைக்கிரண்டுநாள்; நாம்கூடக் கொண்டுபோவ தொன்றுமில்லை; ஆகையால் உள்ளவரையில் சுகபோகங் களை அனுபவிப்பதே நமது கடமை" என்று ஒருவன் இருப்பானே யானல் அவனை அநாகரீகன் என்றுசொல்வது பிசகாகுமா? இப்போது நாம் கைக்கொண்டிருக்கும் நாகரீகத்திலோ, சரீரசௌக்கியமே முக்கிய மானதாகவும் மற்றவை பிற்பட்டவையாகவும் கருதப்படுகின்றன. இதை அநாகரீகம் என்று சொல்லுவதால் எவரேனும் குறைகூற இடமுண்டோ? இவ்விஷயத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்தவரும் மிகவும் அநுபவப்பட்ட வருமான மகாத்மா காந்தியும் இதையே பன்முறையும் பலவிடங்களிலும் உரைத்துள்ளார்.

நம் மேல்நாட்டு நாகரீகமானது எப்படி சரீரசுகத்தையே பெரி தாகக்கொண்டு அதை நாடுகிறது என்பதைச் சற்று விசாரிப்போம். நம் முன்னோர்கள் புலித்தோல், மான்தோல் ஆடைகளையோ அல்லது கையி ளுல் நெய்த வஸ்திரங்களையோ தரித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது நாம் இயந்திரங்களில் நெய்யப்பட்ட சலவை மல்லையும் மஸ்லின் துணியை யும் நாடுகிறோம். கொஞ்சம் கரடுமுரடான துணியை உடுத்திக்கொண் டால் 'பத்தாம் பசலி' என்கிறோம். "கதர் தரித்துக்கொள்வது உடம்பை உருத்துகிறது. ஆகையால் அதுவேண்டாம்" என்கிறோம். இது சரீர சுகத்தை நாடியேயல்லவா? நம்முன்னோர்கள் கிராமங்களில் தனித்தனி வீடுகளில் வசித்துக்கொண்டும், தரையின்மேல் படுத்துத் தூங்கிக்கொண் டும் இருந்தார்கள், நாமோ மாடிவீடுகளையும், நாற்காலிகளையும், சோபாக் களையும், மெத்தைகளையும் மின்சாரவிசிறிகளையும், மின்சாரவிளக்கு களையும் தேடுகிறோம்? என்? சரீரசுகத்தை நாடியல்லவா? அவர் கள் ஓர் ஊருக்குப்போகும்பொழுது இரண்டொரு துணிகளடங்கிய ஓர் சிறு மூட்டையே கையில்கொண்டு போனார்கள். நாமோ ஒருபெட்டி, ஒருபடுக்கை (அதில் ஒருமெத்தை, இரண்டு தலையணி, இரண்டு சால்வை கள், ஒரு கம்பளி) இவைகளில்லாமல் கிளம்புவதில்லை. என்? நமக்குப் படுக்கையில்லாமல் தூக்கம் வராது. அவர்கள் மாட்டுவண்டியிலோ அல்லது கால்நடையாகவோ பிரயாணம் செய்தார்கள். நாம் கோச்சு வண்டிகளையும், மோடார்வண்டிகளையும், ரிக்ஷாக்களையும், புகைவண்டி களையும், ஆகாயக் கப்பல்களையும் நாடுகிறோம். மணிக்குப் பத்துமைல் போகும் மாட்டுவண்டியானாலும் நமக்கு இப்போது தேவையில்லை. நான்கு மைல் போகும் குதிரைபீடனே நமக்கு மேலாக இருக்கிறது. என்? மாட்டுவண்டி நாகரீகமானதல்ல. பீடனில் உடம்பு அசையாமல் சுக மாகப்போகலாம். அவர்கள் தங்கள் முஷ்டிகளைக்கொண்டும் அல்லது

ஈட்டி அம்புமுதலியவைகளைக் கொண்டும், யுத்தம்செய்தார்கள். நாம் துப்பாக்கிகளைக் கொண்டும் பீரங்கிகளைக் கொண்டும் அகிழ்களில் மறைந்துகொண்டு நின்றபடியே யுத்தம்செய்து ஆயிரக்கணக்கான உயிர்களை ஒரு நொடிப்பொழுதில் பரலோக யாத்திரைக்கு அனுப்பிவிடுகிறோம். முஷ்டியுத்தம் செய்வது இப்பொழுது அநாகரீகம். ஏன்? அது மிகவும் கஷ்டம், சரீரப்பிரயாசைப் படவேண்டும், நின்றவிடத்திலிருந்து சுடுவதுபோலாகாது. அவர்கள் மாடுகளைக் கொண்டும், கலப்பைகளைக் கொண்டும் நிலங்களை உழுது பயிர்செய்து வந்தார்கள். இப்போது அது அநாகரீகம். நாம் உழுவதற்கும், விதைவிதைப்பதற்கும், களை பிடுங்குவதற்கும் இயந்திரங்களைத் தேடுகிறோம். ஏன்? சிரமமில்லாமல் சொற்பநாட்களில் அநேக ஏகரா நிலங்களைப் பயிர்செய்துவிடலாம். அதிகப்பணம் சம்பாதித்துவிடலாம். கலப்பையைக்கொண்டு யார் கஷ்டப்படுவது? கை ஒடிவதாக இருந்தாலும் வேலையே நின்றுபோவதாக இருந்தாலும் இயந்திரங்களே நமக்குச் சுகமானவை. நம்முன்னோர்கள் ஒருநாளுக்கு இரண்டு அல்லது அதிகமானல் மூன்றுவேளையே போஜனம் செய்து வந்தார்கள். நமக்கோ குறைந்தது ஆறுவேளை ஆகாரம் வேண்டிஇருக்கிறது. காலை 6 மணிக்கு படுக்கைக் காபி (Bed Coffee), 9 மணிக்குக் காலை ஆகாரம், 12 மணிக்குச் சாப்பாடு, 3 ½ மணிக்கு டிப்பன், 7 மணிக்கு இராச்சாப்பாடு, 9 மணிக்குப் பால். கோவிலில் ஆறுகாலநைவேத்தியம் தவறினலும் பாதகமில்லை. நமது வீடுகளில் ஒருவேளை ஆகாரம் தவறலாகாது. நமது பொழுதில் பாதிக்கு மேல் சாப்பிடுவதற்கே செலவாகிறது. பாக்கியுள்ளபொழுது இளைப்பாறுவதற்கும், அலங்கரித்துக் கொள்வதற்கும் விதிக்கப்படுகிறது. சாப்பிடுவதற்கு முன் பசியினல் சிரமம்; சாப்பிட்ட பிறகு உண்ட களை. ஆகவே நம் பொழுது பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடிகிறது. "Eat to live, but don't live to eat"—"உயிருடனிருப்பதற்காகச் சாப்பிடு; சாப்பிடுவதற்காக உயிருடனிராதே" என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழியுண்டு. நம் நாகரீகத்தில் நாம் சாப்பிடுவதற்காகவே இன்னும் கொஞ்சகாலம் உயிரோடிருக்கக்கருதுகிறோமேயல்லாது எதையாவது பசியில்லாமலிருக்கச் சொல்பம் உண்டு நற்சீவியம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமில்லை. அடிக்கடி சாப்பிடுவது மாத்திரமல்ல. நமது ஆகாரமும் சுகத்தை உண்டுபண்ணத் தக்கதாகவும் ருசிகரமாகவும் இருக்கவேண்டியிருக்கிறது. கொஞ்ச வருஷங்களுக்கு முந்திவரையில் நம்பெரியோர்கள் தண்ணீரில் போடப்பட்ட அன்னம்கூட உபயோகித்து வந்தார்கள். ஒரு கறியும் ஒருகுழம்போ அல்லது ரஸமோ இருந்தால் அவர்களுக்குப் பரம சந்தோஷம். நமக்கு ஷட்ரஸோபேதமாய் நான்குவகைக் கறி, இரண்டுவகைப் பச்சடி, இரண்டுவகைக் குழம்பு,

இரண்டுவகை ரஸம் முதலியவைகளிருந்தாலும் சேமாயிபாயசம் இருந்தால் நன்றாக இருக்கும் குஞ்சாலாடுவானால் ரொம்பசுகம் என்று இப்படித் திருப்தியில்லாத தெய்வங்களாய் கிடந்தலைகிறோம். நூறு வருஷங்களுக்கு முந்தி நம்தேசத்தில் காபியுமில்லை, கோகோவுமில்லை; குளிர்ந்த தண்ணீரே அவர்களுடைய அமர்ந்த பானம். இப்போது "காபி சாப்பிடாதவன் முழுப்பட்டிக்காடு" என்கிறோம். நமக்கு காபி, டீ, கோகோ முதலியவை டிப்பனுக்குப் போதாமல் காராபூந்தி கொண்டுவா' 'மசாலவடை கொண்டுவா', பகோடா நன்றாயில்லை மைசூர்பாக் கொண்டுவா', ஜாங்கிரி சுகமாயில்லை ஹல்வா கொண்டுவா' என்று நாக்கைத் தீட்டிக்கொண்டு திரிகிறோம். சிறிய கிராமங்களில்கூட காபிகிளப்புகள் ஒன்றிரண்டில்லாமல் எட்டுப்பத்தாய்த் தலைப்பட்டு விட்டன. தன் கிராமத்திலில்லாவிட்டாலும் அயல் கிராமத்திலிருக்கிற காபிகிளப்புக்கு நான்கு மைல் நடந்து போயாவது காலை மாலை காபிசாப்பிட்டுவரும் கிராமவாசிகள் அநேகரை ஒவ்வொருவரும் காணலாம். இவைகளெல்லாம் நாக்கைத் திருப்தி செய்விப்பதற்கே யல்லவா? நம்முன்னோர்களுக்கு பயாஸ்கோப், ஸினிமா என்றால் இன்னதென்றே தெரியாது. பெயரைக் கேட்டாலே அது என்ன ஒருமிருகமா அல்லது ராக்ஷதனா என்று கேட்பார்கள். இப்போது அவைகள் நாகரீகத்தின் அடையாளங்கள். நமக்கு வாரத்திற்கொருதரமாவது பயாஸ்கோப், டிராமா, அல்லது ஸினிமா பார்க்காவிட்டால் தூக்கம் வருகிறதில்லை. அவைகளைப் பார்க்காதவனும் நாகரீகமற்றவன். சென்னைமாநகரில் கன்னையா கம்பெனியில் "சதாரம்" சரித்திரம் போடப்போகிறார்களென்றால் நான்கு நாட்கள் முந்தியே திருநெல்வேலியிலிருந்துகூட ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். ஏராளமான பணத்தை ரயில் செலவிட்டு, மிகுதியுள்ளதைச் சென்னையில் தாரைவார்த்துவிட்டு, கண்ணையும் விழித்துக்கொண்டு, நிற்பதற்குக்கூட இடமில்லாமல் கொட்டகையில் சிரமப்பட்டுக்கொண்டு கண்கொட்டாமல் பார்க்கிறார்கள். என்னசுகம்! என்ன சுகம்!! என்கிறார்கள். என்னசுகம்? கேவலம் கண்களைத் திருப்தி செய்து கொண்ட சுகமேயல்லாது வேறு என்னசுகம்? இந்நாகரீகச் சின்னங்களெல்லாம் இந்திரிய சுகத்தை நாடியேயல்லவா?

(தொடரும்.)

K. நடேச அய்யர், B. A., L. T.,
சித்தூர்.

---

## வேதாந்த சாத்திர விசார சங்கிரக வினாவிடை
## இராம கிருஷ்ண சம்பாஷணை.

(57-ம் பக்கத் தொடர்ச்சி).

இரா:—கருமத்தை பயன்நோக்காது செய்யின் சித்தசுத்தியுண்டாமாயின், உபாசனை செய்யவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுவது எற்றிற்கு?

கிரு:—கருமத்தில் உபாசனை அடங்குமாயினும், அது சித்தித்தத்தின் விக்ஷேபதோஷத்தை நீக்குதலின் அதனைச் சாஸ்திரங்கள் கருமத்தினும் வேறாகப் பிரித்துக் கூறுகின்றன. இங்குச் சரீரகருமம் கருமமென்றும், மானசகருமம் உபாசனை என்றும் அறிதல் வேண்டும்.

இரா:—கருமத்தின் பயனையும் உபாசனையின் பயனையும் விவரித்துச் சொல்லவேண்டும்.

கிரு:—உட்கருவி என்னும் அந்தக்கரணத்தில் மலம், விக்ஷேபம், ஆவரணம் என மூன்றுதோஷங்கள் உண்டு. இம்மூன்றனுள் மலம் நிஷ்காம கருமத்தால் நீங்குவதாம்; விக்ஷேபம் உபாசனையினல் நீங்குவதாம்; ஆவரணமோ (மறைப்போ; அஃதாவது தன்னை மறைத்த பந்தமென்னும் அஞ்ஞானமோ) தன்னையறிதலென்னும் தத்துவஞானத்தால் நீங்குவதாம். மலதோஷமும் விக்ஷேபதோஷமும் உள்ளவிடத்து ஆவரணதோஷம் நீங்குவதற்குக் காரணமான தத்துவஞானம் உண்டாகாமையால், அஃதுண்டாதற்பொருட்டு மலதோஷத்தை நிஷ்காம கர்மத்தினுலும் விக்ஷேபதோஷத்தை உபாசனையாலும் பிரயத்ன பூர்வகமாக நீக்குதல்வேண்டும்.

இரா:—மலமாவது என்ன?

கிரு:—சென்ற ஜென்மங்களில் கொலை, களவு முதலிய தீவினைகளைச் செய்வதனுலுண்டாய் அந்தக்கரணத்தில் சம்ஸ்காரரூபமாய் அதிசூக்ஷ்மமாய் உள்ள பாபமாம். அது அதர்மமென்றும் சொல்லப்படும். (பாபபுண்ணிய மிரண்டிற்கும் அபூர்வமென்றும், அதிருஷ்டமென்றும் பெயருண்டென்று இங்கறிதல் வேண்டும்).

இரா:—பாபத்திற்கு அதிர்ஷ்ட மென்னும் பெயரிருப்பதால் அது பிரத்தியக்ஷ விஷயமன்றென்பது பெறப்படுகின்றது. அங்ஙனமாயின் அதனையறிவது எப்படி?

கிரு:—அநுமானத்தால் அறியவேண்டும்.

இரா:—அவ் வநுமானத்தின் வடிவமென்ன?

கிரு:—"கம்சன் பாபி, தீயசருமங்களைச் செய்வதால், துரியோதனன் போல" என்பது இங்கு அநுமானத்தின் வடிவமாம்.

இரா:—என் சித்தத்தில் பாபம் உண்டென்பதை நான் எப்படி அறிதல் கூடும்?

கிரு:—உன் சித்தத்தில் கொலை, களவு முதலிய பாபகர்மத்திலாவது பிறர் மனை நயத்தல் முதலிய விஷயபோகத்திலாவது இச்சை யுண்டாயின் உன் சித்தத்தில் பாபமுண்டென்று நீ அறிந்து கொள்ளல்வேண்டும். புகையுள்ளவிடத்தில் தீயிருத்தல் போல, கெட்டஎண்ணம் உள்ள சித்தத்தில் பாபமுன்டென்றறிதல் வேண்டும்.

இரா:—இப்பாபமென்னும் மலதோஷத்தை ஒழிப்பதற்கு நிஷ்காமகருமமன்றி வேறு சாதனங்களும் உண்டோ?

கிரு:—உண்டு, அவற்றுள் முக்கியமானவை பூததயையும் ஈசுவர நாமோச்சாரணமுமாம். இவற்றுள் நிஷ்காம கர்மமும் பூததயையும் மலதோஷத்தை மாத்திரம் நீக்குவதாம். ஈசுவர நாமோச்சாரணமோ மலதோஷத்தோடு விக்ஷேபதோஷத்தையும் நீக்குவதாம்.

இரா:—பூததயை என்றால் என்ன?

கிரு:—எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி இரங்குதலாம்.

இரா:—ஈசுவர நாமோச்சாரணமென்று லென்ன?

கிரு:—நூல்வலையாகிய காரியத்துக்குச் சிலந்திப்பூச்சி முதற்காரணமாயும் நிமித்தகாரணமாயு மிருத்தல்போல, உலகமாகிய காரியத்துக்கு முதற்காரணமாயும் நிமித்த காரணமாயும் உள்ள பரமேசுவராதுஅளவிறந்த திருநாமங்களுள் சிலவற்றை இடைவிடாது பக்தி

சிரத்தையோடு சொல்லுதலாம். ஆனால் டம்பத்துக்காக ஈசுவானது நாமங்களைப் பிறர்கேட்கும்படி கூறுதலும் கூடாது; ஈசுவரநம்பிக்கையில்லாதவர்கள் கேட்குமாறு கூறுதலும் கூடாது. எப்போதும் தமதுகாதுக்கும் கேளாவாறு "சங்கரா! மஹாதேவா! கோவிந்தா! கிருஷ்ணா! ராமா!" என்று பக்தி சிரத்தையோடு உச்சரிப்பவர்க்கே மலதோஷமும், விக்ஷேபதோஷமும் நிவர்த்தியாவனவாம். இராமா! நீ 'தெய்வ மிகழேல்' 'திருமாலுக் கடிமைசெய்', 'சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு', 'பழிப்பன பகரேல்' என்று நமது ஞானத்தாயாராகிய ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளி யிருத்தலைக் கவனித் துணர்தல் வேண்டும்.

இரா:—விக்ஷேபமாவது என்ன?

கிரு:—சித்தம் ஒருதலைப்பட்டு நில்லாது பலதலைப்பட்டலைதலாம்.

இரா:—அஃது அவ்வாறலைதற்குக் காரணமென்ன?

கிரு:—காமம் (ஆசை), வெகுளி (கோபம்), கடும்பற்றுள்ளம் (உலோபம்) முதலியனவாம்.

இரா:—அவை உண்டாதற்குக் காரணம் எவை?

கிரு:—தானல்லாத உடம்பில் 'யான்' என்னும் அபிமானமும், தனதல்லாத பொருளில் 'எனது' என்னும் அபிமானமுமாம். இந்த அபிமானங்கள் ஆவரணம் நீங்குமிடத்துத் தாமே நீங்கிப் போவனவாம். விக்ஷேபம் உபாசனையால் பையப்பைய ஒழியுமாயின் சொரூபாவரணம் நீங்குதற்குரிய சாதனம் உண்டாவதாம்.

இரா:—சொரூபாவரணம் நீங்குதற்குரிய சாதனம் உண்டாவதற்குத் தடையாயுள்ள விக்ஷேபம் எவ்வாறிருப்பதாம்?

கிரு:—வேதாந்த சிரவணத்திலாவது மனனத்திலாவது மகாவாக்கியார்த்தமாகிய ஜீவப் பிரஹ்ம ஐக்கியத்திலாவது சித்தம் ஒருமுகமாக நில்லாமல் பலமுகப்பட்டோடுதலாம்.

இரா:—முற்கூறிய விக்ஷேபம் எதனாலொழியும்? பிற்கூறிய விக்ஷேபம் எதனாலொழியும்?

கிரு:—முற்கூறிய விக்ஷேபம் உபாசனைசெய்வதாலும், பிற்கூறிய விக்ஷேபம் சமாதி அப்யாசம் செய்வதாலும் நீங்குவனவாம்?

இரா:—உபாசனைசெய்பவன் எவ்வாறு இருத்தல் வேண்டும்?

கிரு:—உபாசனை செய்பவன் முன்னர் கொலையையும் பொய்யையும் பிரயத்தன பூர்வகமாக விட்டுவிடல் வேண்டும்; அங்க (தேக) சுத்தியும் ஆடைசுத்தியும் உடையவனு யிருத்தல்வேண்டும்.

இரா:—உபாசனை எவ்வாறு செய்தல்வேண்டும்?

கிரு:—தீயோர் போதல் வருதல் இல்லாததாயும், கொசுகு எறும்பு முதலியவற்றின் உபத்திரவ மில்லாததாயும், ஓதமில்லாததாயும், நல்லகாற்று வரக்கூடியதாயுமுள்ள அறையில் அடியில் தருப்பையையும், அதன்மேல் மான்தோலையும், அதன்மீது மெல்லிய துணியையும் மேடுபள்ள மில்லாமல் அமைத்து அதன்மீது கிழக்கே நோக்கியாவது வடக்கே நோக்கியாவது விற்றண்டு போல நிமிர்ந்த முதுகுடன் பத்மாசனமிட்டு உட்கார்ந்து மூக்கு நுனியின்மீது பார்வையை நிறுத்தி தான்விரும்பிய தெய்வம் தனது இருதய தாமரையில் எழுந்தருளியிருப்பதாகப் பாவித்து அதனுடைய திருவடித் தாமரைகளில் தன்மனத்தை, பேரரும்பில் வண்டுகள் தேனுண்ண மொய்ப்பதுபோல அழுந்த நிறுத்துதலாம். (இன்னும்வரும்).

(சென்னை, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும், வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய)

கோ. வடிவேல் செட்டியார்.

---

# வேமன யோகியின் ஜீவிய சரித்திரமும் அவர் மொழிந்தருளிய பாடல்களும்.

(83-வது பக்கத் தொடர்ச்சி.)

**வேமனரின் ஸ்தல, கால, குல, குடும்ப, நிர்ணயத்தின் அபிப்பிராய பேதங்கள்.**

வேமனரை யோகி யென்றும் கவியென்றும் மதித்து அநேகர்கள் பூஜிக்கிறார்கள் என்று முன்சஞ்சிகையில் சொல்லி யிருக்கிறோம், சாதா

ரண ஜனங்கள் (பாமரர்கள்) இவருக்கு உத்ஸவத்தை நடப்பித்து இப்பொழுதும் சில இடங்களில் பூஜிக்கிறார்கள். 16-வது நூற்றாண்டிலிருந்து கவீஸ்வரர்களும் இவரை மிகவும் மெச்சி ஸ்தோத்திரம் செய்திருக்கின்றார்கள்.

இவர் யாவராலும் கொண்டாடப்படுவேதற்கு காரணங்கள் பலஉள. இவர் யோகியாகியும், மதஸம்ஸ்காரத்தில் மிகவும் பிரயாசப்பட்டவராகவும், ரசாயன சாஸ்திரக்ஞராகவும், திகம்பரராகவும் இருந்ததனாலும் இன்னும் அநேக காரணங்களினாலும், பாமரர்களும் இவரைப்பூஜிக்கத் தொடங்கினார்கள்.

கவிகளாலும் பாமரர்களாலும் பூஜ்யார்ஹதையை அடைந்த யோகீஸ்வர கவீஸ்வரரான வேமனரின் காலஸ்தல குடும்பங்களை நிர்ணயம்செய்வது எளிதல்ல. இவ்விஷயத்தைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் பலஉள. இவர்சரித்திரத்தை எழுதிய அநேகர் வெவ்வேறு விதமாய்ச் சொல்லுகிறார்கள். வேமனர் தன்னைப்பற்றிச் சிற்சில இடங்களில் கூறியிருக்கின்றார். ஆனால் இவ்வபிப்பிராயபேதங்களைக் குறைக்க அவைகள் அவ்வளவு போதுமானவைகளல்ல.

வேமனாது குடும்பத்தைப்பற்றியும், மதத்தைப்பற்றியும், ஜாதியைப்பற்றியும் திட்டமாகச்சொல்வது கஷ்டமானகாரியம். பிரௌன் (Brown) துரை, அவர் ஜங்கமஜாதியைச் சேர்ந்தவரென்றும், ஒரு மதத்தையும் அவர் தூஷிக்கவில்லை என்றும் கூறுகிறார். ஆனால் ஜங்கம ஜாதியை அவர் சேரவில்லை என்பது உங்களுக்கு போகப்போகத்தெரியும். ஜாதியல் 'காபு' அல்லது குடியானவர்ஜாதி எனச்சொல்லப்படுகிறது.

கர்நூல் அரசனாகிய அனவேம ரெட்டியின் குடும்பத்தை சேர்ந்தவர் என்கின்றனர் சிலர். இவருடைய சஹோதரர் கன்டிக்கோட்டையைத் தன் சுவாதீனத்தில் வைத்திருந்ததாகவும் புலப்படுகிறது. மற்றுஞ் சிலர் கடப்பை ஜில்லாவில் சிட்டிவேலு என்னும் கிராமத்தான் என்கிறார்கள். ப்ரௌன்துரை இவ்விஷயத்தில் பிரயாசப்பட்டவரையில் 'தெலங்காரை' ஊருக்கு தென்மேற்கில் அவர்ஜனித்தாக அபிப்பிராயப் படுகிறார். காம்பெல்துரை ஊகித்ததில் கடப்பைஜில்லா தென்மேற்கு கோடியில் 'கரோபல்லி' என்றகிராமம் வேமனர்பிறந்த இடம் என்றும் இப்பொழுதும் அங்கு அவருடைய வம்சத்தினர்கள் இருப்பதாகவும் கூறுகிறார்.

ஸ்தல நிர்ணயத்தில் எவ்வளவு பேதமிருக்கிறதோ அவ்வளவு பேதம் காலநிர்ணயத்திலும் இருக்கிறது. ப்ரௌன்துரை வேமனர்

17 வது நூற்றூண்டின் ஆரம்பத்தில் இருந்ததாகச் சொல்லுகிறார். காம்பெல் துரை தற்காலத்திற்கு 300 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகச் சொல்கிறார். 540 வருஷங்களுக்கு முன்பு இவர் இருந்ததாக பூர்ணுசர்யர் எழுதியிருக்கின்றார்.

எவ்விதம் காலநிர்ணயத்தில் பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ, எவ்விதம் ஸ்தலநிர்ணயத்திலும் பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அவ்விதமே அவர் குலத்தைப்பற்றியும், குடும்பத்தைப்பற்றியும் பேத அபிப்பிராயங்கள் அநேகம் ஏற்படுகின்றன. சிலர் இவரை பிராமணரென்கிறார்கள், சிலர் இவரை விஸ்வபிராமணரென்கிறார்கள், சிலர் இவரை ரெட்டி என்கிறார்கள், சிலர் இவரை அரசன் தம்பியென்றும், சிலர் ராஜவம்சத்திற்கு சம்பந்தப் பட்டவரென்றும், மற்றும் சிலர் இவர் சாதாரண எழ்மை ஸ்திதியிலிருந்தவர் என்றும் சொல்கிறார்கள்.

பேத அபிப்பிராயங்கள் நிறைந்த இஜ்ஜீவிய சரித்திரத்தில் எதார்த்தம் யாது? நாம் எதார்த்தத்தைத் தெரிந்துகொள்வதெப்படி? நாம் இவ்விஷயங்களிலிருந்தே சில விஷயங்களை பேதமின்றி நிரூபிக்கக் கூடும். அவர் பத்யங்களிலிருந்தும் மற்றும் இதர காரணங்களிலிருந்தும் இந்நான்கு விஷயங்களைப்பற்றி நிர்ணயம்செய்ய வழி இருக்கிறதா என்று கவனிப்போம்.

ஆனல் ஸ்தல நிர்ணயத்தைப்பற்றி நம்முடைய ஊஹைகள் அனுவஸ்யமே. கையில் வெண்ணெய் இருக்க நாம் நெய்க்காக அலைவதேன்? வேமனரே சிற்சில இடங்களில் தான் கொண்டவீடில் பிறந்ததாகத் தெரிவித்திருக்கிறார். அவர் கடேரபல்லியில் சமாதியடைந்ததாகவும் தெரியவருகிறது. இவர் சிஷ்யர்களில் சிலர் வாதவிவாதப் பெருக்கினல் "நல்லசெருவு" என்ற கிராமத்தையும், "கொண்டகொமர்லா" என்ற கிராமத்தையும் அவர் ஜன்மபூமியாகக் கொண்டாடுகிறார்கள் என்று கடப்பா மான்யூலிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. கதிரிதாலுக்காவில் இருக்கும் சமாதியையும் ஆலயத்தையும், இவர் சிஷ்யகோஷ்டிகளையும் நாம் பார்க்குமளவில் கதிரி இவர் ஜன்மபூமியாய் இருக்கவேண்டுமென்று திட்டமாய் கூறலாம். ஆனல் கதிரி இவர் பிறப்பிடமாக இருக்குமாயின் இராஜவம்சத்தைச் சேர்ந்தவரல்லர் என்று சந்தேஹமறச் சொல்லக் கூடும். மரக்காப்புரம் இவர் பிறப்பிடம் என்று சிலரும், கதிரிதாலுக்காவில் ஹேமபுரியில் பிறந்ததாகச் சிலரும் சொல்லுகின்றனர். ஆனல் இந்த அபிப்பிராயங்களுக்கு ஆதாரங்கள் இல்லை. கொண்ட வீடில் ஜனித்து, கண்டுகோட்டை முதலான ஸ்தலங்களில் திரிந்து, கடைசியில்

கடேரிபல்லியில் சமாதி யடைந்ததாக நிர்ணயிப்பதே உசிதமாகத் தோன்று கிறது. ஏனெனில் வேமன யோகீஸ்வரர் ஒருபத்யத்தில் (செய்யுளில்)

"ஊருகொண்ட வீடு குனிகி பஸ்சிமவீதி
மூகிசிந்தபல்லே மொதடியில்லு
எட்டிரெட்டி குலமதேமிதெல்புது
விஸ்வதாபிராம வினுரவேமா"

என்று எழுதியிருக்கிறார். இப்பத்தியத்திலிருந்து ஸ்பஷ்டமாக பிறந்த ஊர்கொண்டவீடென்றும், (உனிகி) வாசஸ்தானம் மேற்கு வீதியில் என்றும், ஸமாதி கடேபள்ளியென்றும் தெளிவாகத் தெரிகிறது. ரெட்டி ராஜ்ஜியமாகிய ராஜமஹேந்தர வரத்திலிருந்து விஜயநகரம் வரையில் தேச சஞ்சாரம் செய்ததினால் சிலபத்யங்களில் இவ்வூர்களின் பேர்களை யும் நதிகளையும் அதிகமாக உபயோகப் படுத்துகிறார். ஒரு பத்யத்தில், 'நாய் கோதாவரியில் ஸ்நானம்செய்தால் சிம்ஹம் ஆய்விடுமா' என்றும், இன்னும் ஒருபத்யத்தில், 'நாய்வாலைபிடித்து கோதாவரியை தாண்டவிய லுமா' என்றும் சொல்லியிருக்கிறார். இதைவைத்துக்கொண்டு கோதாவரி பிராந்தியத்தில் பிறந்தவர் என்று சொல்லலாமா? வேமனரே ஓர் பத்தியத் தில், "ஊருகொண்ட வீடு" என்று அருளியபொழுது ஏன் வீண்தர்க்கம். கிருஷ்ணாப்ராந்தியத்தில் கலியாணத்திற்கு தெலுங்கில் "மனு" என்பார் கள். "பெண்டிலி" என்னும் கல்லியாணத்திற்கு ப்ரதிபதமாகிய தெலுங்கு பதத்தை கோதாவரி ப்ராந்தத்திலும், "மனு" என்பதை க்ருஷ்ணாமண்ட லத்திலும் உபயோகப் படுத்தினார்கள். வேமனர் மனுஎன்ற பதத்தை அதிகமாக உபயோகப்படுத்தினர். இதனாலேயும், வேமனரே இவ்விஷ யத்தைப்பற்றி மொழிந்தருளி யிருப்பதினாலேயும் நிச்சந்தேஹமாய் அவர் ஊர்கொண்ட வீடென்றே கூறலாம்.

கால நிர்ணயத்திலும் குலகுடும்ப விஷயத்திலும் இருக்கும் பேதங் களை கவனித்து அவைகளில் யாது வாஸ்தவமாயிருக்கலாம் என்று பரி சீலிப்பது அவஸ்யமே. இவ்விஷயங்களில் சரிவர நாம் ஆராய்ச்சி செய் து, இவர் ஜன்ம காலத்தில் நம்தேசத்திய ஸ்திதியையும், மத அபிப்பிரா யங்களை பற்றியும் கவனித்தல்வேண்டும். இவ்விஷயங்களில் நாம் ஊக்கத் தோடு கவனித்தால் வேமனருடைய ஜீவியசரித்திரமும், அவர் மொழிந் தருளிய அம்ருதவாக்குகளும் தெளிவாக நமக்குப் புலப்படும்.

(தொடரும்.)

வி. ஸி. இராமசுவாமி ஐயர்,
உபாத்தியாயர்,
முனிசிபல் ஹைஸ்கூல், வாலாஜா பேட்டை.

## புருஷார்த்தம்.

(90-ம் பக்கத்தொடர்ச்சி.)

தான்கற்பித்தபடி மனைவி நடந்துகொள்ளாவிடின், புருஷன் அவளிடத்துச் சின்னாள் (அவள் திருந்தும்வரை) அன்புரையாடாதிருக்கக் கடவன். இஃதொன்றே அவளுக்குப் பெரியதண்டனையாம். இந்திரிய ஜயமில்லாத புருஷனுக்கிது கஷ்டமாகத்தோன்றும். வேலையில்லாத பெண்கள்கூடிக் கலகமிடுவது கனவிடங்களிற் காணப்படுகிறது. வீடு தோறும் நூல் ராட்டினமொன்று இருப்பின் அதுபெண்களை நல்லவர் களாக்கும். ஆணாயினும் பெண்ணாயினும் சோம்பலாயிருப்பின் அது அவர்க்குத் துன்பஞ்செய்வதாம்.

குழந்தைகளிடத்தும் அன்பாயிருத்தல் வேண்டும். குழந்தை களின் மழலைச்சொல் குழலினும் யாழினும் இனிதேனும், அவர்களுக்கு இழிந்த சொற்களைக் கற்பித்துக் கேட்டு மகிழ்வது குற்றமாம். குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், கீழ்ப்படிதலையும் கற்பித்தல்வேண்டும். சிறுவர்க்கு ஒழுக்கம் பயிற்றுழி "சொல்லிக் காட்டு வதைவிடச் செய்துகாட்டுவதுமேல்" என்னும் முதுமொழியை ஞாபகப் படுத்திக்கொள்ளுதல் நலம். சிறு சிறு குற்றங்களுக்கெல்லாம் தண்டித் தல் கூடாது. "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பதுகடனே. சிறியோர் பெரும்பிழை செய்தனராயிற் பெரியோ ரப்பிழை பொறுத்தலுமரிதே" என்பது வெற்றிவேற்கை. சிறியோர் செய்யும் பெரும்பிழைகள் கீழ்ப்படியாமையும் வேண்டுமென்று குற்றஞ் செய்தலுமாம். இக்குற்றங்களுக்காக அவர்களைத் தண்டியாமல் விடுதல் தவறு. மனையாளைப் பஞ்சணையிலும் மைந்தர்களை நெஞ்சிலும் மாத்திரம் புகழ்தல்வேண்டும்.

இன்பந்துய்த்தற்பொருட்டு இல்வாழ்க்கையே மேற்கொண்டா ரனேகர் துன்பமே துய்த்துவருதற்குக் காரணம் அவர்கள் அதனை நடத்துவதற்குரிய ஆற்றலைப்பெற்றிராமையும், அதனை மேற்கொள்ள வேண்டிய முறைப்படி மேற்கொள்ளாமையும், அதனை நடத்தும் முறை களை அறியாமையும் பிறவுமாம். ஆற்றலைப் பெற்றிருத்தலாவது: பிரஹ்ம சரிய ஒழுக்கத்தை தவறாது அநுசரித்து அதனால் நோயின்றிய திட சரீரத்தையும், ஜெயிக்கப்பட்ட இந்திரியங்களையும், பெற்று, தன்னையும் மனைவி மக்களையும் குறைவறப் போஷிக்கத்தக்க போதியவருவாயுடைய வனாயு மிருத்தலாம். மேற்கொள்ளவேண்டிய முறையாவது வயது,

கல்வி, செல்வம், சக்தி, புத்தி உணவு முதலியவற்றால் தனக்கிளைத்த பெண்ணைத்தேடி, ஜோதிடநூலார் கூறும் பொருத்தங்களை நன்கு கவனித்து மணம் முடித்தலாம். நடத்தும் முறையாவது: மனைவியின் மேலுள்ளவிருப்பத்தால் அவள் வழிப்பட்டொழுகாமையும், வருவாய்க்குத் தக்க செலவுசெய்தலும், தேவபூஜை, பிதுர் கருமம், சுற்றந்தழுவுதல் விருந்தினர்ப்பேணல் முதலியவற்றைத் தனது சக்திக்கேற்பச் செய்தலும், பிறவுமாம். இவ்வொழுக்கங்களைப்பற்றி மேலும் அறியவிரும்புவோர் திருக்குறள் இல்லறவியலையும், பெருவாயின் முள்ளியாருளிய ஆசாரக்கோவையையும் வாசித்துணர்க.

சுகவாழ்க்கையை விரும்புவார் சுத்த ஆகாரத்தைப் பசி எடுத்த போது மிதமாக உட்கொள்ளல், அதிக தூக்கத்தையும் பகல் நித்திரையையும் விரும்பாமை, காலையிலெழுதல், உடற்சுத்தம், உடைசுத்தம், நல்லோரிணக்கம், வேதமுதலாகப் புராண மீறுக்கூறப்படும் நன்னூலாராய்ச்சி, வரும்படிக்குக் காரணமான தன்தொழில் முறையாராய்ச்சி, இன்னோரன்ன நற்பழக்கங்களைக் கையாளுக. ஆகாரம், நித்திரை, மைதுனம் இவைமூன்றும் மிகின் மிகுநோய் செய்யுமென்க. கள், புகையிலை முதலிய மயக்க வஸ்துக்களை யுபயோகித்தலும், சூதாடுமிடம், குதிரைப் பந்தயம், நாடகம் முதலிய வற்றுக்குப் போதலும் ஆராய்ந்துநோக்கில் துன்பந்தருவனவென்பது தெள்ளிதின் விளங்கும். காப்பிக்குடியும் கால்குடியாம். உண்டவுடன் சுறுசுறுப்பைத் தரும் எந்த ஆகாரமும் தேகசுகத்தைக் கெடுப்பதாம். சுவையொன்றனையே கருதி பசியிலாத போது ஒருநாளிற் பலமுறை ஆகாரங்கொள்ளுகின்றவன் அவ்வாகாரத்தினால் தனக்குவரும் இன்பத்தை இழக்கின்றான். இனிப்பான பண்டங்களும் அவனுக்குக் கசக்கும். துவரப் பசித்துண்பவனுக்கோ உப்பிலாக் கூழும் உம்பாமுதத்தினும் இனிதாய்த் தோன்றும். உணவு உண்பதில் இடையிட்டகாலம் நீடிப்பதனால் சுவை இன்பம் அதிகம் அநுபவிக்கப் படுவதாம். இம்முறை மகளிரின்பந் துய்த்தற்கண்ணும் பொருந்தும். விஷயாநந்த மனுபவிப்பதில், ஆசை எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு இன்ப மதிகரிக்கின்றது. (தொடரும்.)

சா. கந்தசாமி முதலியார்,

தமிழ்ப்பண்டிதர், சென்னை.

---

# கூட்டுறவு நாணயச் சங்கங்களேற்பட்ட விதம்.

(63-ம் பக்கத் தொடர்ச்சி).

கூட்டுறவு இயக்கம் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டதென்றும், கூட்டுறவு பண்டசாலைகளின் மூலமாக வியாபித்ததென்றும் முன்னர் கூறினோம். கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஜெர்மனியில் ஆரம்பமாயின. எல்லாத் தேசங்களிலும் எல்லாக்காலங்களிலும் வியவசாயிகளும் தொழிலாளிகளுமே கடன்வாங்கவேண்டியவராகின்றனர். நிலத்தைச் சீர்ப்படுத்தவும், பயிரிடவும், அதன்பலன் கைக்கூடும் வரையில் ஜீவனம் செய்யவும் மற்றுமிவைபோன்ற காரியங்களுக்காகவும் வியவசாயிகள் கடன்வாங்க நேரிடுகிறது. காலாகாலங்களில் மழையில்லாமற் போனலும் வியவசாயிகள் தாராளமாய்க் கடன்வாங்கித் தீரவேண்டியதாகும். இவ்வாறு வாங்கவேண்டிய கடன் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தால் அவர்கள்படும் கஷ்டம் சொல்லத்தரமல்ல. சாதாரணமாய் அவர்கள் கடன் நிலத்தின் ஆதாரவிலோ பயிரின் ஆதாரவிலோ வாங்கப்படுவதால் கடன்கொடுப்பவனுக்கு தக்க பொறுப்பு இருக்கிறது. 'பொறுப்பு பலமாயிருந்தால் கடன் எளிதாயிருக்கும்' என்பது ஓர் பழமொழி. ஆனல் பலமான பொறுப்பு இருந்தாலும் வியவசாயிகளுக்கு எளிதாகவும் சொற்பவட்டிக்கும் பணம் கிடைப்பதரிது. சொற்ப வட்டிக்குப் பணம் கொடுப்பவை சாதாரணமாய் பாங்கிகளே. எளிய வியவசாயிகள் பாங்கிகளிலிருந்து பணம் பெறுவது அசாத்தியம். ஊரிலிருக்கும் செல்வந்தர்களிட மிருந்தும், இதர வியவசாயிகளிடமிருந்தும் சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் தான் அதிகவட்டிக்கு கடுமையான நிபந்தனைகளோடு கடன்பெறச் சாத்தியமாகிறது. கடன்கொடுப்பவர்களின் பேராசையால் வியவசாயிகளின் கஷ்டம் அதிகமாகிறது. தச்சர், நெசவுவேலை செய்வோர் சக்கிலியர் முதலான தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலுக்காக வேண்டிய சாமான்கள் வாங்குவதன்பொருட்டு கடன்படவேண்டியதா யிருக்கும். ஜீவனத்திற்காகவும் கடனைத்தீர்ப்பதற்காகவும் அவர்கள்செய்த சாமான்களை குறைந்த விலைக்கு விற்கவோ நஷ்டப்படவோ நேரிடுகிறது.

சுமார் 80 வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவிலுள்ள பலதேசங்களிலு முள்ள வியவசாயிகளும் தொழிலாளர்களும் மேற்கூறியவாறு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதோடு அடிக்கடி பஞ்சமும் வந்துக்கொண்டிருந்தது. எவ்வித உபாயஞ்செய்தும் கஷ்டங்கள் நீங்க

வில்லை. ஜெர்மனியிலும் இப்படியே வியவசாயிகளும் தொழிலாளர்களும் நாளுக்கு நாள் அதிக கடன்பட்டு வந்தார்கள். தவிர 1845—47-ல் கடினமான க்ஷாமமும் வந்தது. இந்த நிலைமையில் ஜனங்கள் படும் பாட்டைக் கண்டு பரிதாபமடைந்து 'ஷூல்ஸ் டெலீட்ச்' (Schulze Delitzch) என்னும் மகான் எப்படியாவது தொழிலாளர்களையும் ஏழை ஜனங்களையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று தீர்மானித்தார். இவர் ஜெர்மனியிலுள்ள 'டெலீட்ச்' என்னும் பட்டணத்தில் மாஜிஸ்திரேட்டாக இருந்தவர். 1849 ல் அவர் தன்வேலையை ராஜீநாமா செய்துவிட்டு ஏழை ஜனங்களின் துன்பங்களை நீக்கி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டு மென்னும் நோக்கத்துடன் ஆங்காங்குச் சென்று பிரசங்கங்கள் செய்யவும் வியாசங்களெழுதி பிரசுரிக்கவும் கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபிக்கவும் தொடங்கினர். அவருடைய முக்கிய நோக்கம் யாதெனில்: "எளியோரின் துன்பத்தைப் போக்க சர்க்கார் தயவை எதிர்பார்ப்பது சிலாக்கியமல்ல; அதனால் தீமை விளையுமென்றும்; ஜனங்கள் தங்கள் முன்னேற்றத்திற்குத் தாங்களே முயற்சி செய்ய வேண்டும், அதற்குக் கூட்டுறவே தக்கமார்க்கமென்பதே". 1849-ல் இவர் தனது ஊரில் வியாதிகளிலிருந்து நீக்குவதற்கு ஒரு சங்கமும், தொழிலாளருக்குத் தோல் முதலான சாமான் வாங்கும் பொருட்டு அவர்களுக்காக ஒரு சங்கமும் ஏற்படுத்தினர்.

தொழிலாளர் அக்காலத்தில் 100க்கு மாதம் 1க்கு 5க்குக் குறையாமலும், சில விடங்களில் 100க்கு நாள் ஒன்றுக்கு 1 முதல் 2 வரையிலும் வட்டி கொடுக்கவேண்டியிருந்ததால் அவர்களுடைய கஷ்டத்தைப் பார்த்து 'ஷூல்ஸ் டெலீட்ச்' என்பவர் 1850-ல் தன்ஊரில் ஒரு கூட்டுறவு நாணயசங்கம் ஏற்படுத்தினர்.

கடன் சிலசமயங்களில் நன்மை பயக்கும்; சில சமயங்களில் தீமையைத்தரும். நியாயமானதாயும் பிரயோஜனகரமாயு முள்ள காரியத்திற்காக உபயோகப் பட்டால் கடன் நன்மை செய்யும், அவ்வாறு உபயோகிப்பவர் கட்டாயமாய் சிக்கனமாயும் செலவிடுவேதில் அதிஜாக்கிரதையாயு மிருப்பார்கள். பணத்தை துர்விநியோகப் படுத்தினலும் அழியக்கூடிய காரியங்களுக்கு உபயோகப் படுத்தினலும் சிக்கன மில்லாமலிருந்தாலும் கடன் தீமையைத்தான் செய்யும். 'ஷூல்ஸ் டெலிட்சு'க்கு இவ்விஷயம் நன்ருய்த் தெரிந்திருந்தபடியால் அவர் சுலபமாயும் லாபகரமாயுள்ள வட்டிக்கும் கடன் கொடுப்பதைமட்டும் விரும்பாமல், சரியான காரியங்களுக்கும் அப் பணத்தைக்கொண்டு ஒருவன் தன் சம

பாத்தியத்தை அதிகப் படுத்திக் கொள்ளக் கூடிய காரியங்களுக்கும் மாத்திரமே கடன் கொடுக்க உத்தேசித்தார்.

தர்ம கைங்கரியத்தாலோ சர்க்கார் உதவியாலோ பணம்சேகரித்து எளியவர்களுக்குக் கடன் கொடுப்பதால் அவர்களுக்கு நன்மை யுண்டாகாதென்றும், தீமையே உண்டாகுமென்றும், தங்கள் சுய முயற்சியால் வந்த பணத்தைக் கடன் கொடுத்தால் மட்டுந்தான் அவர்களுக்கு நீடித்த நன்மை யுண்டாகுமென்றும் அவர் உறுதியாய் நம்பி, அதற்காக அவர் எளிய ஜனங்களை ஒன்றுகச் சேர்த்து கூட்டுறவினுல் அவர்களைப் பலப்படுத்தி அவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். இவ்வாறு சங்கம் சேர்ந்து, சங்கத்தின் அங்கத்தினர் யாவரும் தங்கள் தங்கள் சக்திக்குத் தக்கபடி மூலதனம் வைத்தும், வரையறுக்கப்படாத பொறுப்பை மேற்கொண்டும் கடன்பெறும் பட்சத்தில் சங்கத்திற்குத் தேவையான கடன் நியாயமான வட்டிக்குக் கிடைப்பது கஷ்டமல்ல. சங்கம் வாங்கும் கடனை அதன் அங்கத்தினர்க்கு பிரயோஜனகரமான காரியங்களுக்குக் கடன் கொடுக்கலாம். இவ்வித காரியங்களுக்காக உபயோகிப்பதாலுண்டாகும் சம்பாத்தியத்தினுலும் சிக்கனத்தினுலும் அங்கத்தினர் வாங்கின கடனைத் தவணைகளாகத் திருப்பிக் கொடுக்கலாம். இவ்வாறு சங்கங்களில் நாணயஸ்தராயும் கஷ்டப்பட்டு உழைப்பவராயு முள்ளவர்களை மாத்திரம் அங்கத்தினராய்ச் சேர்ப்பதனுல் சங்கத்திற்கு நஷ்டம் வருவதற்கு நியாயமில்லை.

மேற்கூறியவா றுள்ள நோக்கங்களுடன் ஏற்படுத்திய நாணயச் சங்கம் விமரிசையாய் நடந்தது. 1858-க்குள்ளாக 30 சங்கங்கள் ஏற்பட்டன. 1888-ல் 2160 சங்கங்களிருந்தன. இப்போது அநேகாயிரம் சங்கங்களிருக்கின்றன. (தொடரும்.)

S. துரைசாமி ஐயர், B. A.,
ராணிப்பேட்டை.

---

## ஸர் ஜெகதீச சந்திர போஸின் ஆராய்ச்சிகள்.

(75-வது பக்கத் தொடர்ச்சி).

ஈச்வர சிருஷ்டியில் எல்லாப் பிராணிகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள இந்திரியங்களுக்குள் அதி நுட்பமானது கண். "ஸர்வேந்திரியாணும்

நயனம் பிரதானம்'' என்பர். ஆனால் ஹர்ட்ஸியன் ஒளியை நிரூபிக்க ஸர் போஸ் செய்த "கண்ணோ'' நம்முடையதைவிடப் பதின்மடங்கு மேலானது. நமது நேத்திரத்திற்கு ஆகாயத்தந்தியின் கிரணங்களாகிய "அப்ரத்யக்ஷ ஒளி'' யைக்காணும் சக்தி கிடையாது. ஆனால் அவர் செய்த கண்ணுக்கு இருவித ஒளியையும் பார்க்கும் சக்தியுண்டு. அதை நம்முடைய கண்ணைப்போலவே செய்துவிடவும் கூடும் அதன்முன்னால் ஜலமுள்ள ஓர் கண்ணாடிப் பாத்திரத்தை வைத்தால் அது நம் கண்ணைப் போலவே ஒரே ஒளியைத்தான் பார்க்கக்கூடும். இதை எடுத்துவிட்டால் அது இருவித ஒளியையும் பார்க்கும் சக்தி யடைகிறது. அதற்கு அவ்வித சக்தி யிருக்கிறதென்று எப்படித்தெரியுமெனச் சிலர் கேட்கலாம். நாம் பார்க்கும் ஒவ்வொரு வஸ்துவின் பிம்பமும் மனதில் பதிவதற்கு எப்படி நமக்கு மூளை என்பதாக ஓர் அவயவம் இருக்கிறதோ அதுபோல அதற்கும் அதி நுட்பமான மின்சாரக் கருவிகளைக்கொண்டு பார்க்கப்படும் வஸ்துக்களின் பதிவுகளை ஏற்றுக்கொள்ள ஓர் மூளை ஒன்று ஸர் போஸ் செய்து வைத்திருக்கிறார். இக்கருவிகளை யெல்லாம் செய்ய எவ்வளவு வருஷகாலம் ஆயின எனச்சிலர் கேட்கலாம். வருஷங்களல்ல, சில நிமிஷங்களே அவருக்குச் சென்றனவென்றால் அவருடைய புத்தி எவ்வளவு நுட்பமாக இருக்கவேண்டும்! இவ்விதம் அவர் செய்த ஓர் "கருவி'' அல்லது "கண்'' என்னவென்று நினைக்கிறீர்கள்? ஏதாவது உயிருள்ள வஸ்துவா? அல்லது அதன் இந்திரியமா? நம்மால் அசேதன மென்றும் ஜடமென்றும் கருதப்படுவதும் ஆனால் வாஸ்தவத்தில் நம்முடைய இந்திரியங்களைவிடப் பதின்மடங்கு நுட்பமானது மான "Galena'' என்னப்படும் ஒருவகை ஈயமே!

ஸர் போஸ் லண்டன் மா நகரத்தில் பிரசங்கம் செய்யும்பொழுது தன்னுடைய ஆராய்ச்சிகளைப் பற்றிச் சொன்னதுடன் அம்மேல் நாட்டு சாஸ்திரிகளால் போதிக்கப்படும் விஷயங்களிலுள்ள பல அபத்தங்களையும் எடுத்துக் காட்டி அவை தவறானவை என்பதையும் நிரூபித்தார். ஹர்ட்ஸியன் ஒளியைப் பார்ப்பதற்கு பிரான்லியால் செய்யப்பட்ட coherer என்னும் குழலில் உபயோகப் படுத்தப்படும் உலோகத்தூள் அவர்கள் நினைத்தபடி அப்ரத்யக்ஷ ஒளியால் சாதாரணமாய் ஒன்றோடொன்று சேர்க்கப்படவில்லை யென்றும் குழலைத் தட்டினால் அவைகளை மறுபடியும் முன்போல ஆக்கிவிடலாமென்று அவர்கள் நினைத்தது தவறென்றும் எப்படி ரப்பரால் செய்யப்பட்ட பெரிய அறைபோலுள்ள ஓர் சுருக்குப் பைக்குள் சில ஜனங்களை விடுத்து அப்பையின் சுருக்கை இழுத்தால் அதிலுள்ள ஜனங்களனைவரும் ஒருவரோடொருவர் சேர்க்கப்படுவது மல்லாமல் ஒருவர்மேலொருவராக நெருக்கப்பட்டு சரீரமுழுவதும் நலைக்கப்பட்டு

சொல்லொணு சிரமத்தை யடைந்து உயிருக்கு மன்ருடுவார்களோ, எப்படி மறுபடியும் அவர்களை அப்பையினின்றும் வெளியே விட்டபோதிலும் அநேக மாதங்களின்றி அவர்களுடைய சரீரங்கள் முன்போல சௌக்கியத்தையும் பலத்தையும் பெறமுடியாதோ, அதுபோலவே அந்த உலோகத் தூள்களின் அணுக்கள் அப்பிரத்யக்ஷ ஒளியினுல் ஒன்றன்மேலொன்ருய் சொல்ப இடத்தில் மோதப்பட்டு அதிக சிரமத்தை அடைகின்றனவென்றும் பிறகு கொஞ்ச காலத்துக்கு அவைகளை உபயோகியாமல் இளைப்பாற விட்டாலன்றி அவைகள் முன்போல் ஆகிறதில்லையென்றும் பிரத்யக்ஷரூபமாக நிரூபித்தார். இதற்கு உதாரணமாக ஸர்போஸ் பிரத்யக்ஷ ஒளியினுல் எப்படி 'போடோ' என்னும் புகைப்படத்தின் அணுக்கள் அதேவிதமாக பழம் பிழிவதுபோல் ஒன்று சேர்க்கப்பட்டு ஆயாஸத்தை அடைகின்றனவென்றும் பிறகு காலம் செல்லச்செல்ல அவைகள் பூர்வ ஸ்திதியை அடையவே அப்படத்திலுள்ள பிம்பமானது அழிந்துபோய் அப்படம் உபயோகமில்லாமல் போகிறதென்றும் எடுத்துக்காட்டினுர். உலோகத்தூளுக்கு ஆயாஸமாவது! இளைப்பாறவாவது! இதென்ன விந்தையாக இருக்கிறதே எனச்சிலர் யோசித்தார்களெனினும் நவீன கருவிகளைக்கொண்டு கண்களுக்கெதிரில் அவரால் நிரூபிக்கப்பட்ட விஷயங்களை அவர்களால் மறுக்கவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

இவ்விதம் எற்படும் ஆயாசமானது ஒரு உலோகத்திற்கு மாத்திரமா? அல்லது எல்லா உலோகங்களுக்குமுண்டா? உயிருள்ள வஸ்துக்களில் சில பலமுள்ளனவாயும் இலகுவில் களைப்படையாதனவாயும் மற்றவை பலவீனமானவையாயும் சீக்கிரத்தில் களைத்துப்போவனவாயும் இருப்பதுபோல உலோகங்களிலும் சொல்ப உபயோகத்திற்கே தகுந்தவைகள் வேறும் அதிக உபயோகத்திற்குத் தகுந்தவைகள் வேறும் இருக்கின்றனவா? அல்லது எல்லாம் ஒரேசக்தி யுடையனவா? என்னும் கேள்விகளை ஸர்போஸ் முறையே அநேக உலோகங்களைக்கொண்டு இதன் பிறகு ஆராயத்தலைப்பட்டார். இதற்கு உலோகங்களின் ஸ்திதியை அதிநுட்பமாகக் கண்டறியும் சக்தியையுள்ள சிறந்த கருவிகளைத் தயாரிக்க வேண்டியதாக இருந்தது. தன்புத்தி கூர்மையினுலும் செய்தற்கரிய இக்கருவிகளை இலகுவில் செய்து முடித்தார். இக்கருவிகளைக் கொண்டு வெகு சிரமப்பட்டு ஒவ்வொரு உலோகத்தையும் பலவிதமான சிகிச்சைகளுக்குள்ளாக்கிப் பரிக்ஷித்தார். அவைகளில் மின்சாரசக்தியைப் பிரயோகித்தார். உயிருள்ள வஸ்துவின் அவயத்தில் அந்தசக்தியைப் பிரயோகித்தால் எவ்வெவ்வுணர்ச்சிகளும் நடுக்கங்களும் காணப்படுமோ அவ்வவைகளே இவ்வுலோகங்களிலும் காணப்பட்டன. பனிக்கட்டியைக்

கொண்டு அவைகளைக் குளிரச்செய்தார். நம்முடைய சரீரமானது எப்படி அதிகக் குளிர்ச்சியினல் மரத்துபோகிறதோ அதுபோல அவைகளும் உணர்ச்சியற்றுப்போயின. அவைகளுக்குள் கள்முதலிய லாகிரிவஸ்துக்களைச் செலுத்தினர். அவைகள் வெறிபிடித்தவனுடைய செய்கைகளைப் போன்ற உணர்ச்சிகளைக் காட்டின. அவைகளைக் கிள்ளினர்; அடித்தார். அவைகள் திடீரெனத்திரும்புவதும் கஷ்டப்படுவதும் போன்ற உணர்ச்சிகளை வெளியிட்டன. அடிமேலடி அடித்தார் அவைகளின் உணர்ச்சி வரவரக் குறைந்து கடைசியில் பிணம்போல் உணர்ச்சியற்றவைகளாய் விட்டன. மிதமிஞ்சி உபயோகப்படுத்தப்பட்ட துப்பாக்கி இரும்பு முதலிய உபயோகங்களைப் பரிக்ஷித்தார். யாதொரு உணர்ச்சியும் காணப்படவில்லை.

இவ்வளவோடு ஸர்போஸ் தன் ஆராய்ச்சிகளை நிறுத்தியிருந்தபோதிலும் அவருடைய பெயர் எந்நாளும் நீடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இவைகளையெல்லாம் கண்ணாரப் பார்த்தவர்களுள் எவருக்குதான் இவைகள் ஆச்சர்யகரமாக விரா? எவர்தான் இவைகளை மறக்கவாவது விட்டுவிடவாவது முடியும்? ஆனல் அவர் பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்படுபவரல்ல. ஆராய்ச்சியே அவருடைய குலதெய்வம் போல் இருந்தபடியால் ஆதித்தன் தெற்கு வடக்காகப் போனபோதிலும் அவர் தன் ஆராய்ச்சிகளை நிறுத்தக்கூடியவரல்ல. ஆகையால் மேன்மெலும் வேலைசெய்யத் தொடங்கினர்.

அசேதனமெனக் கருதப்படும் உலோகங்களுக்கே உணர்ச்சியினல் உயிருண்டென்றால் அவைகளைக்காட்டிலும் மேலானவையும் பிறப்பு வளர்ப்பு உள்ளவையுமான செடி, கொடி, புல், பூண்டு, மரம் முதலியவைகளுக்கு உயிருண்டு என்பதற்குச் சந்தேகமா? அவைகளுக்கு உணர்ச்சி முதலியவை இன்னும் அதிகமாக இருக்கவேண்டுமன்றோ? இதையும் பரிசீலனைசெய்ய வேண்டிய தவசியம் என ஸர்போஸ் இவைகளையும் பரிக்ஷிக்க ஆரம்பித்தார். அவருக்கு ஸ்தாவர சாஸ்திரம் (Botany) என்பது அதிகமாகத்தெரியாது. பிரகிருதி சாஸ்திரத்தைக் கொண்டே இதையும் அவர் தெரிந்துகொள்ள முயன்றார். இது, கைதேர்ந்த தச்சனொருவன் தன்னுடைய தச்சவேலையின் திறத்தைக் கொண்டே வைத்திய சாஸ்திரம் கற்றுக்கொள்ள முயன்றுலெப்படியோ அதுபோலிருந்தது. இருந்தபோதிலும் போஸ் கொஞ்சமேனும் மனம் தளரவில்லை. ஸ்தாவரங்களைப் பரிசோதிப்பதற்கென வேண்டிய கருவிகளையும் மின்சார சாமான்களையும் வெகுபெருமையோடும் சாதுர்யத்தோடும் தயாரித்தார். இக்கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு செடி கொடியின் ஒவ்வொரு பாகத்தையும் தானே தன் சரித்திரத்தையும் நிலமையையும் தெரிவிக்கும்படி செய்

தார். இஃதெப்படியெனில், இக்கருவிகளில் மின்சார சாமான்களும், சிறிய நிலக்கண்ணாடிகளும், காந்தமுள்ள இரும்புக் கம்பிகளும், பென்சில் களுமே சேர்க்கப்பட்டிருக்கின்றன. எந்தச்செடியின் எந்த பாகத்தைப் பரிக்ஷிக்கவேண்டுமோ அந்தபாகத்தைத் தகுதியான கருவியுடன் இணைத் துவிட்டால் அக்கருவியானது அதிலுள்ள பென்சிலைக்கொண்டு ஓர் காகிதத்தில் வரையும் ஓர் கோட்டைக்கொண்டோ அல்லது அதிலுள்ள கண்ணாடியினால் இதற்கெனத் தயாரிக்கப்பட்டிருக்குமோர் படுதாவின் மேல் ஏற்படும் பிம்பத்தைக்கொண்டோ அப்பாகத்தின் நிலைமையையும் அதன் அதிநுட்பமான மாறுபாடுகளையும் இலகுவில் கண்டறியலாம். இக்கருவிகள் வேலைசெய்யும்போது அவைகளினருகில் ஒருவரும் போகிறதில்லை யானபடியாலும், எல்லாம் இக்கருவிகளே செய்துகொள் ளும்படி அமைக்கப்பட்டிருக்கிற படியாலும் அவைகளால் காண்பிக்கப் படும் விஷயங்களில் கொஞ்சமேனும் சந்தேகத்திற்கிடமில்லை. அவை களைக்கொண்டு ஒருவினாடியின் இரண்டாயிரத்திலோர் பாகமாகிய ஓர் சிறியகால அளவையும் நிர்ணயம் செய்யவும், ஒருவர் ஓர் செடியின் பக்கத் தில் நின்று கொண்டிருக்கும்போது அவரால் மெதுவாகவும் சாதாரண மாகவும் விடப்படும் சுவாசத்தினால் அச்செடியில் ஏற்படும் அநேக மாறு பாடுகளையும் கண்டறியவும் கூடுமென்றால் அவைகளின் சக்திகளை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். இக்கருவிகளில் சேர்ககப்பட்டிருக் கும் சாமான்கள் மிகவும் சாதாரணமானவைகளாக இருந்தபோதிலும் இவைகளுக்கு இவ்வளவு நுட்பமான சக்தி எங்கிருந்து வந்ததென்று ஆச்சர்யப்படாதவர்களில்லை. ஒரு இந்துதேசத்துக் கறுப்பு மனிதனுக்குக் கூட இவ்வளவு புத்தியும் சாமர்த்தியமும் இருக்கிறதா என்று பிரமிக்காத வெள்ளைக்கார சாஸ்திரிகளில்லை. (தொடரும்.)

K. நடேச அய்யர், B. A., L. T.,
சித்தூர்.

---

## பெட்டிமனிதன் அல்லது வண்ணான் குறியால் வெளிப்பட்ட இரகசியம்.

(புத்தக ரூபமாக வெளியிடும் சுதந்திரம் இதன் ஆசிரியர்க்கே உரியது.)

**முதல் சஞ்சிகையின் 31-ம் பக்கத்தின் தொடர்ச்சி.**

அவர் அங்குவந்ததும் குதிரையின் வேகத்தை விரைவில் அடக்கி நாற்புறமும் பார்த்தார். மிகவேர்த்தார். ஒன்றும் புலப்

படவில்லை. கண்ணுக் கெட்டின மட்டும் நாற்புறமும் நோக்க நோக்க எதுவும் எதிர்ப்படவில்லை. அல்லது முன் செல்வதாகவும் தோன்றவில்லை. அதனால் அவர் சரீரத்திலுள்ள இரத்தம் கொதிப்படைந்து மூளையில் தாக்கத் தாக்க கோபம் மேலிட்டு கண்களிரண்டும் சிவந்து விட்டன. மிக்க கோபாவேசத்துடன் சுற்றிச் சுற்றிப் பார்ப்பதால் மேலுதடும் கீழுதடும் நொடிப்பொழுதில் இருபது விசை அசைய, கறுத்து அடர்ந்து வளர்ந்து முறுக்கப்பெற்ற மீசைகள் துடித்தன. பார்வையின் இலக்ஷணம் வேறு படுந்தோறும் புருவங்களிரண்டும் சந்தர்ப்பத்திற் கேற்ப அடிக்கடி குவிந்து கொண்டும் விரிந்துகொண்டும் இருந்தன. இவ்வகை குவிந்தும் விரிந்தும் படுந் தன்மையால் கண்களின் மேலிமைகள் கீழிமைகளை அடிக்கடி நெருங்கி, வெகு சாக்கிரதையாகக் கவனியுங்கள் என்று சொல்வது போல் மிக்க படபடத்து நடித்தன.

இவ்வளவு கோபாவேசத்துடன் நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தும் பயன் படாமையைக் கண்டு அவர் மிகுந்த ஆயாசத்துடன், இனி யாரைக் கேட்பது? எங்குச் செல்வது? இனி செய்வது என்ன? என்று யாதொன்றும் தோன்றாது திகைத்திருக்கும் சமயத்து, குப்புசாமியின் வண்டிபோகும் மார்க்கத்திலிருந்து வழிப் போக்கனொருவன் வந்துகொண்டிருப்பதைக் கண்டு அவன் தன்னிடம் வருமட்டுந் தாமதிக்கப்பொறாமல் வண்டியை யோட்டி அவனை நெருங்கியதும் நின்று "ஐயா குதிரை வண்டியொன்று முன்திரை பின்திரையுடனும் பின்னே யொரு மகம்மதிய ஸ்திரீயுடனும் போகக் கண்டீர்களா?" என்று மிக்க வருத்தத்துடனும் ஆயாசத்துடனும் கேட்டார். அதற்கு அம்மனிதன் சற்று நிதானித்து, வாயைப்பிளந்து வானத்தைப் பார்த்து யோசித்து "ஆம் ஐயா, நீங்கள் சொல்வதைப் போலவே இவ்விடத்திலிருந்து சுமார் இரண்டு மைலுக்கப்பால் ஓர் குதிரை வண்டியொன்று குடை கவிழ்ந்து வீழ்ந்திருக்கிறது. வீழ்ந்த வண்டியையுந் தனியே நிற்கும் ஸ்திரீயையுந் தவிர மற்றெவரையுங் காணவில்லை. வண்டியோ குடைகவிழ்ந்திருக்கிறதாயினும் வண்டியின் முன்னும் பின்னும் திரை மட்டும் இடப்பட்டே இருக்கிறது. "வண்டியினுள் இருப்பது யார் என்பதை யறிய முடியவில்லையா? வண்டியி

னுள்ளே இருந்தவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்ததா? தயவு செய்து சீக்கிரமாக சொல்லும் ஐயா" என்றார் கனவானும் கண்களிரண்டினும் நீர் ததும்ப.

வழிப்போக்கர் உடனே அவரைத் தேற்றி துக்கத்தை யாற்றி "ஐயா கவலைப் படாதீர்கள், வண்டியினுள் இருப்பது யார் என்பதை யறிய நான் சமீபித்து, அங்கே தனித்து நிற்கும் ஸ்திரீயைப்பார்த்து உள்ளே யாராவது இருந்தால் அவர்களையும் வெளியே வந்துவிடும்படி சொன்னால் சமீபத்திலுள்ள சாவடியிலாவது சுகமாக தங்கி வேறுவண்டியில் போகலாமே என்றும் சொன்னேன் அதற்கு அந்தம்மாள் உள்ளிருப்போர் வெளியே வரமுடியாதென்றும் வேறுவண்டியை ஏற்பாடு செய்வதற்காக ஆட்கள் சென்றிருப்பதாகவும் சொல்லிவிட்டார்கள். எனக்கும் நேர மதிகமாய் விட்டதால் அங்கு அதிகம் கவனியாது வந்துவிட்டேன். எனக்கு விடை யளியுங்கள் விரைவிற் சென்றால் விபரமறியலாம் என்று சொல்லிவிட்டு போயினன் வழிப்போக்கனும்.

வண்டி குடைகவிழ்ந்து, நிற்கிறாள் மாது என்றதைக் கேட்டதும் அக்கனவான் அப்போதே பெருத்தகாரியங்களனைத்துங் கைகூடிவிட்டதென நினைத்து மனோவேகமும் இதற்கீடாகாதெனச் சொல்லும்படி, விட்டார் குதிரையை. நளனே சாரத்தியஞ் செய்ததைப்போல் குதிரையும் இமைக்குமுன் கவிழ்ந்து வீழ்ந்துள்ள வண்டியினருகில் வந்து நின்றது.

வழிப்போக்கன் சொன்னதைப்போல் மாது தனித்து நிற்கக் காணோம். ஆனால் வண்டியை நெருங்கி ஜனங்கள் சூழ்ந்திருக்கவும், முக்காடிட்டுக்கொண்டு ஓர் மாது தலை குனிந்து கொண்டு வண்டியினருகே உட்கார்ந்திருப்பதையும் கண்டார். கண்டதும் விரைவில் குதித்தார் தரையில். சென்றார் தலை குனிந்து கொண்டுள்ள உருவத்தி னருகில். எட்டியுதைக்க கோபத்துடன் தூக்கினார் ஓர் காலை. வேகத்துடனடிக்க ஓங்கினார் தன் கையிலிருந்த சாட்டியை.

இந்த சமயத்து சமீபத்திலிருந்த மகம்மதியரொருவர் "ஏ! ஏ! என்னையா! ஒ ஷா கீட்டே போர்ரே! நில்லு நில்லு நிக்கிறவங்

கிலிக்கெல்லால் தெரியாதா? பொம்பளிங்க யாராவது வந்தாக்கா அப்போ பாத்திக்கிலாம்" என்று தடுக்க, கனவான் கோபித்து நெருங்கியே தீருவேனென முடுக்க அதற்குள் கூலிவேலை செய்ய அவ்வழி போய்க்கொண்டிருந்த ஒருபெண் பிள்ளையைக் கூப்பிட்டு முக்காடிட்டுக்கொண்டு மவுனமாக இருக்கும் மாதை எழுப்பும்படி அனுப்பினர்கள்.

அந்த ஸ்திரீ சமீபித்து தட்டிப்பார்க்க இரண்டு பிரப்பங் கூடைகளும் அவைகளின் மேல் மூடப்பட்டிருந்த வெள்ளைத் துப்பட்டியுந் தவிர வேறொன்றும் இல்லாததைக் கண்டு அங்கிருந் தோரெல்லாம் ஆச்சரிய மடைந்தனர். இப்படுமோசத்தைக் கண்ட பின்னர் அனைவருமாகச் சேர்ந்து வண்டிக்கு முன்னும் பின்னும் இட்டிருந்த திரையை நீக்கிப் பார்க்க ஓர் சிறிய துணி முடிச்சு ஒன்றைத் தவிர வேறொன்றையுங் காணவில்லை.

அந்த நேரத்தில் அங்குள்ளவர்களுக்குள்ள ஆத்திரத்தின் மிகுதியால் அம்முடிச்சை பிரித்தனர். அதற்குள் ஓர் காகிதச் சுருள் ஒன்று இருந்தது. அச்சுருளில் என்ன வரைந்திருக்கிற தென்பதை படிக்கவேண்டுமே! கூட்டமோ அறுபதுபேருக்கு அதிகமாயிருக்கும். அவர்களில் நமது கனவானைத்தவிர மற்றவர்க ளெல்லாம் நிரட்சர குக்ஷிகளே. [நமது இந்துதேசத்தில் படிப்பு வாசனை தெரிந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தீர்களா!]

இவ்வகை நேர்ந்ததும் நமது கனவானின் கவுரவத்திற்கு ஹானியில்லாமலிருக்க ஹேதுவாயிற்று. அக்காகிதச் சுருளின் விஷயத்தை வேறொருவரும் அறியக்கூடாதென்னும் எண்ணத்துட னும் என்ன எழுதப்பட்டிருக்கிற தென்பதை விரைவில் அறிய வேண்டுமென்னும் ஆவலுடனும் நமது கனவான் நான் படித்துச் சொல்லுகிறேன் என்று வாங்கி பிரித்து விஷயங்களை ஓர் முறை மனத்துள்ளேயே வாசித்துக்கொண்டு மிக்க விசனமேலிட்டும், அதை வெளிக்குக் காட்டாமல் உள்ள சமாசாரத்தை மறைத்து வேறு விதமாக வாசிக்க ஆரம்பித்தார். (தொடரும்.)

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்,
இராணி வைத்தியசாலைத் தலைவர், இராணிப்பேட்டை.

## அங்கும் இங்கும்.

விநோதமான குழந்தை:—பர்மாவில் மூப்பீன் ஜில்லா பாந்தவுக்கடுத்த மீஞ்சேயுவா என்ற வூரில் வசிக்கும் ஊப்பாமௌ என்ற பர்மாகாரரொருவருடைய குழந்தையான 'மௌட்டுஞ்சாய்' என்னும் ஐந்து வயதுள்ள சிறுவன் பர்மா பாஷையிலுள்ள எந்த விதமான சாஸ்திரத்தையும், பல புஸ்தகங்களையும் பார்த்தவுடனே வாசிப்பதும் அவற்றிற்கு வியாக்கியானம் செய்வதும் அவ்விஷயங்களின்மேல் பிரசங்கம் புரிவதுமா யிருக்கிறுன். ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதி ஆச்சரியத்துடன் அக்குழந்தையைப் பார்க்கப் போகின்றுர்கள் என நேரில் கண்டவரொருவர் எழுதுகிறுர். (சு-ன்)

* * *

மின்சார ரயில்:—பம்பாயில் மின்சாரத்தின் (எலக்ட்ரிக்) சக்தியால் ரயில்வண்டிகளை ஓட்ட ஒரு ரயில்வே கம்பெனியார் தயாரித்திருக்கின்றனர். பிப்ரவரிமாத முதலில் பம்பாய் கவர்னர் முதல் முதலாக தம்கையால் அத்தகைய வண்டியை ஓடச்செய்தார்.

* * *

பம்பாயில் பிச்சைக்காரர்களின் தொல்லை:—பம்பாயில் பிச்சைக்காரர்களின் தொல்லையை நீக்கவும் திடசாலிகளை வீடுகள் கட்டித் தொழில் செய்யும்படி கட்டாயப் படுத்தவும் பம்பாய் கவர்ன்மெண்டார் ஒருதனி உத்தியோகஸ்தரை நியமிக்கத் தீர்மானித்திருக்கிறுர்களாம். இது நல்ல ஏற்பாடுதான். சென்னை மாகாணத்திலும் இவ்வாறு செய்தால் நலமாயிருக்கும்.

* * *

114 பாஷைகள் அறிந்தவர்:—வாஷிங்டன் நகரத்தில் சமீப காலத்திலிருந்த ப்ரொபெஸர். ஜே. ஆர்னர் என்பவருக்கு 53 பாஷைகள் தெரியுமாம். (தொடம்.)

# பஞ்சாங்கம்.

## குரோதன௵ வைகாசி௴

### இங்கிலீஷ் 1925௵ மே௴—ஜூன்௴

| வைகாசி. | மே௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | வியா | சப்46-3 | திரு40-0 | சித்60 | விஷ்ணுபதி புண்யகாலம் |
| 2 | 15 | வெ | அ41-45 | அவி37-50 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 3 | 16 | சனி | நவ38-25 | சதை35-50 | அ35-50ம | பிரயாணம் விலக்க |
| 4 | 17 | ஞா | தச35-58 | பூரட்35-18 | சி35-18அ | மாடுவாங்க |
| 5 | 18 | திங் | ஏ34-33 | உத்35-40 | சித்60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 6 | 19 | செ | துவா34-8 | ரேவ37-0 | சித்60 | |
| 7 | 20 | புத | திர34-38 | அசு39-20 | ம39-20சி | கரிநாள், மாச சிவராத்திரி |
| 8 | 21 | வியா | சது36-13 | பர42-35 | சி42-35ம | மிதுனயனம்35-43 |
| 9 | 22 | வெ | *38-50 | கிரு*46-55 | சி46-55ம | சர்வத்திர அமாவாசை கிருத்திகை |
| 10 | 23 | சனி | பிர42-43 | ரோ52-25 | அ52-25சி | ஜேஷ்ட சுத்தம் |
| 11 | 24 | ஞா | துதி47-8 | மிரு58-55 | சித்60 | சந்திர தெரிசனம் 4-ம் பிறைபோல் தோற்றும் |
| 12 | 25 | திங் | திரி53-15 | திரு60 | சித்60 | ஸ்வர்ண கௌரி விரதம் |
| 13 | 26 | செ | சது59-43 | திரு6-13 | மர6-13சி | மாசசதுர்த்தி விரதம் |
| 14 | 27 | புத | பஞ்60 | புன14-0 | சித்60 | கத்திரிமுடிவு |
| 15 | 28 | வியா | பஞ்6-10 | பூசம்21-55 | அ21-55சி | சஷ்டி, ஆரண்ய கௌரி |
| 16 | 29 | வெ | சஷ்12-15 | ஆயி29-15 | மர60 | கரிநாள் [விரதம் |
| 17 | 30 | சனி | சப்17-23 | மகம்35-30 | அ35-30சி | கரிநர்ள் |
| 18 | 31 | ஞா | அ20-40 | பூரம்40-13 | சி40-13அ | வியாதியஸ்தர் குளிக்க |
| 19 | ஜூன்௴ 1 | திங் | நவ22-53 | உத்43-0 | சித்60 | பிரயாணம் விலக்க |
| 20 | 2 | செ | தச22-30 | அஸ்43-25 | சித்60 | தசஹார விரதம் |
| 21 | 3 | புத | ஏ20-0 | சித்42-25 | சித்60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 22 | 4 | வியா | து15-30 | சுவா39-8 | அ39-8சித் | பிரதோஷம் |
| 23 | 5 | வெ | திர9-28 | விசா34-30 | சித்60 | மாடு, தானியம் வாங்க |
| 24 | 6 | சனி | சது2-0 ○53-53 | அனு28-38 | சித்60 | |
| 25 | 7 | ஞா | பிர45-5 | கேட்22-0 | மர22-0அ | |
| 26 | 8 | திங் | துதி36-13 | மூல15-13 | சி15-13ம | |
| 27 | 9 | செ | திரி27-38 | பூரா8-38 | சித்8-38அ | |
| 28 | 10 | புத | சது19-53 | உத்2-30 திரு56-55 | சி56-55பி | |
| 29 | 11 | வியா | பஞ்13-5 | அவி53-18 | சி53-18ம | |
| 30 | 12 | வெ | சஷ்7-20 | சதை50-30 | சித்60 | |
| 31 | 13 | சனி | சப்3-0 | பூரட்49-10 | ம49-10சி | |

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி சுக் | செ |
| | 20-ரிஷ-புத 21-மிது-சுக் | | ராகு |
| கே | | | |
| குரு | | சனி | |

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ உரையுடன்,

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யம் ... ரூ. 8—0—0

கைவல்ய நவநீத வினவிடை

(ஷியார் இயற்றியது) ... ... ரூ. 2—8—0

பகவத்கீதை வசன வினவிடை-ஷி ஷி ரூ. 1-12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷியார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... ரூ. 0-12—0

விவேகாநந்தர் உபன்யாச ஞானத்திரட்டு . ரூ. 1—0—0

வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... ரூ. 0-12—0

சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன் கூடியது 0-12—0

விவேக சூடாமணி ... ... ... ரூ. 0-12—0

மநீஷாபஞ்சகம் ... ... ... ரூ. 0—5—0

மகாராஜா துறவு-வசனம் ... ... ரூ. 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ரூ. 0—6—0

நாகாஜீவ வாதக்கட்டளை (தமிழ்) ... ரூ. 0—4—0

ஷி (தெலுங்கு) படத்துடன் கூடியது .. ரூ. 0—3—0

காரியசித்தியின் இரகசியம் ... ... ரூ. 0—3—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வ. ஆ.).